சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7	இதழ்: 02	ஜூலை - 2025	விலை - ரூ.20/-
VOL:7	ISSUE: 02	July - 2025	Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-7 மலர்-2 ஜூலை-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

நீ பாசத்திற்காக ஏங்குகிறாய். அது உனக்கு கிடைக்காமல் போகும் போது, நீ அடையும் துன்பத்தை காண என்னால் சகிக்கமுடிய வில்லை. உனது ஏக்கம் எனக்காக மட்டுமே இருக்கட்டும். உனக்கு திகட்டத் திகட்ட அன்பைப் பொழிய நான் இருக்கிறேன். என்னுடைய அன்பு மட்டும் தான் உதாசீன படுத்தாத அன்பு என்பதை உணர்ந்து கொள்.

உன் மனதை திடமாக வைத்துக்கொள். இந்த உலகத்தில் எதுவுமே நிரந்தரமில்லை பெற்ற தாய், தந்தை, மனைவி, கணவன், குழந்தைகள், உற்றார், உறவினர்கள் அனைவரும் குறிப்பிட்ட எல்லை வரை மட்டுமே வருவார்கள். உன்னுடன் நிரந் தரமாக வரப்போவது உனது ஞானத் தந்தையாகிய நான் மட்டுமே.

அதைப் புரிந்து கொண்டு இன்பம் வந்தால் மிகவும் பரவச படாமலும், துன்பத்தைக் கண்டு துவண்டு போகாம லும், எப்போதும் சமநிலையில் இருக்கப் பழகி கொள். அப்போது நீ எதற்கும் கலங்க வேண்டிய அவசியம் இராது. யாருடைய அன்பிற்காகவும் எப்போதும் ஏங்காதே!


அடுத்தவர்கள் என்ன நம்மீது அன்பு காட்டுவது. நாம் அடுத்தவரின் மீது அன்பு காட்டுவோம் என்று சிந்தித்து வாழப் பழகு.

இந்த பக்குவ நிலைக்கு உன்னை கொண்டு வருவது உனக்கு முதலில் சற்று கஷ்டமாகத்தான் இருக்கும். எப்போதெல் லாம் நீ இன்ப, துன்பங்களின் மூலம் உணர்ச்சிவயப்படுகின்றாயோ அப்போ தெல்லாம் என் நாமத்தை உச்சரித்துக் கொண்டேயிரு. அந்த பக்குவ நிலையை நான் உனக்கு தருகின்றேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் பேரருளால் எண்பத்து நான்காவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற இதழின் வெளியீட்டு விழா, 08.06.2025 ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில் மிகச்சிறப் பாக நடைபெற்றது.

விழாவின் முதல் நிகழ்ச்சியாக, நமது ஆசிரியர் அவர்கள் இயற்றிய ஆத்மஞான பாடலை, செல்வி. அமிர்தா, அட்சயா ஆகியோர் பாடினர். நிகழ்ச்சியை திரு. பிரபு தொகுத்து வழங்கினார். இம்மாத இதழை பாராயணப்பகலவன் திரு. சுந்தர் சாய் அவர்கள் வெளியிட, திருவொற்றியூர் பாபா பக்தை திருமதி. லதா அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.

திருமதி. தனம் அகஸ்டின், திருமதி. சுகுணா ராஜசேகர், திரு. கருணாமூர்த்தி, ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர் களுடன் பகிர்ந்து கொண்டனர்.



திரு. அகஸ்டின் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். ஆத்மஞானியர் அனைவரும் இணைந்து ஆசிரியருக்கு குரு காணிக்கை அளித்து மரியாதை செய்தனர். ஆத்மஞானியரின் அன்னதான குழுவினர் வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர்.

கடந்த 12.06.25 வியாழன் அன்று நிகழ்ந்த ஆமதாபாத் விமான விபத்து மிகப்பெரிய வருத்தத்தையும், மனவலியையும் ஏற்படுத்தியது. விபத்தில் பலியான அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவர்களை இழந்து வாடும் அவர்களது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பகவான் சாயிநாதர் ஆறுதலையும், தேறுதலையும் வழங்கட்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

அறிவியல் வெகுவாக முன்னேறியிருக்கும் இக்காலகட்டத்தில் ஒரு போதும் இயற்கையை வெல்ல முடியாது என்பதற்கு இச்சம்பவங்களே சாட்சி. எனவே நிலையில்லாத மனித வாழ்க்கையில் அகங்காரத்திற்கும் ஆடம்பரத்திற்கும் இடம்கொடுக்காமல் இயல்பாய் எளிமையாய் வாழக் கற்றுக்கொள்வோம்.

வாழ்க்கை நிலையில்லாதது. யாருக்கு எப்போது என்ன நிகழும் என்பதை நமது விஞ்ஞானம் ஒருபோதும் கணிக்காது. எனவே நாம் வாழும் ஒவ்வொரு விநாடியும் யாருக்காவது,





எங்கேயாவது, எவருக்காவது ஏதாவது நன்மைகளை செய்து கொண்டே இருப்போம். குறைந்த பட்சம் அடுத்தவரிடம் சிரித்த முகத்தையாவது காட்டிச் செல்வோம்.

எதையும் கொண்டுவரவுமில்லை, எதையும் எடுத்துப் போவதுமில்லை. இருப்பதை எல்லாம் கொடுத்துச்செல்வோம். மனிதம் வாழ இயன்றதை செய்வோம். சக மனிதர்களிடம் உணர்வுகளோடு பழகுவதை தவிர்த்து, அறிவுப்பூர்வமாக பழகுவோம்.

நாம் வாழ்வில் தினம் ஒருவரையாவது சிரிக்க வைப்பேன் என்று உறுதி எடுத்துக் கொண்டால் நம் வாழ்க்கையும் நலமாகும். நல்லதே நடக்கும்.

உலகம் முழுவதும் நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் மத, இன வெறியும், இயற்கை வளங்களை சொந்தம் கொண்டாடத் துடிக்கும் போக்கும் மாறி தலைவர்களிடையே இணக்கமான நட்பு தோன்றி உலகம் முழுவதும் அன்பும், அமைதியும், சமாதானமும் ஏற்பட வேண்டும் என்று பகவான் சாயிநாதரை வேண்டுகின்றோம்.

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மன நிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

ஓம் சாய்ராம்

ஷீர்டி சாய் சத்சரித்ரம் – மனித குலத்தின் மாய பிறப்பறுக்கும் ஒரு மாமருந்து. அதனை ஒரு இயந்திர கதியான பாராயண நூலாக கருதாமல் வாழ்க்கை மாற்றத்தை அருளும் கருவியாக உணர்ந்து, "பாராயணம் செய்ததை அனுதினமும் தியானம் செய்தால், நமது வாழ்வின் குறிக்கோளை அடையும் வழி புலனாகும் என்பதே சாய் வாக்கு"

இந்த உன்னதமான நோக்கில் – ஒரு கருத்தாய்வு செய்யும் வாய்ப்பாக, மூன்று ஆன்மீக அனுபவஸ்தர்கள் பார்வையில்

கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம்,

எனும் மூன்று வழி பாதையில்
ஆன்மீக வாழ்க்கை பயணத்திற்கு சாய் சத்சரித்ரம் காட்டும் பாதை குறித்து தெளிய ஓர் உரை நிகழ்ச்சி
நமது குண்டலினி யோக குரு

திரு. ஸ்ரீராம் பாபா

அவர்களும் உரை நிகழ்த்த இசைந்துள்ளார்கள்.

நாள் : **19.07.2025 (சனிக்கிழமை)**
நேரம் : **மாலை 5** to **8**
இடம் : **பாரதீய வித்யா பவன்**
கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர்,
சென்னை – 600 004.

மேலும் விவரங்களுக்கு –


சுந்தர் சாய்

போன் : 97894 04451 / 9176182498

நமது சாய் அன்பர்கள் அனைவருக்கும் சுந்தர் சாய் கரம் குவித்து சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். எங்கும் சாய்! எதிலும் சாய்! எல்லாம் சாய்! எப்பொழுதும் சாய் என நம்மைக் காத்தருளும் குருவருளுக்கும் எனது வணக்கங்கள். குருவின்றி வேறில்லை குறையேதும் எமக்கில்லை.


பாபாவின் திருவருளால் குருசரித்திர பாராயணம் மற்றும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் சரிதாமிருதம் பாராயணங்கள் செய்ய ஆரம்பித்த துடன், இதை நமக்குத் தெரிந்த மற்ற பக்தர்களிடமும் கொண்டு செல்ல வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது.

ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் சரிதா மிருதம் கிடைத்த உடனேயே ஏழு நாள் பாராயணமாக படிக்க ஆரம்பிக்க நமது சந்தேகங்கள்



தொடர் - 25

திருவருள் தேடி



சிலவற்றிற்கு உடனே அதில் விடை கிடைக்க விறுவிறுப்பாகியது நமது ஆர்வம். இவை உண்மையிலேயே நம்முடன் பேசக் கூடியவை என புரிந்தது.

மேலும் 11 ஸ்ரீ பாதர் புத்தகங்களை வாங்கி நமது சாய் நண்பர்களுக்கு பரிசளிக்க விருப்பம் எழவே அந்த தமிழாக்கப் புத்தகத்தை எழுதிய திரு.சந்தானம் (நெய்வேலி) அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

அவருடைய தொடர்பு எனது ஆன்மீகப் பாதையில் பல வாய்ப்புகள், புனித பயணங்கள், சேவைகள், தொடர்புகள் என உரு வாக்கித் தந்தது. அதற்கு அவருக்கும் எனது மனமார்ந்த நன்றி கலந்த வணக்கங்களை இதன் மூலம் தெரி வித்துக் கொள்கிறேன். அவரிடம் தொடர்பு கொண்டு பிரதிகள் மேலும் தேவை என விசாரிக்கும்

சுந்தர் சாய்
9789404451

பொழுது திரு. புவனேஷ் ஜோஷி என்பவரது கைப்பேசி எண்ணைக் கொடுத்து அவரிடம் பெற்றுக் கொள்ளுமாறு பணித்தார்.

எங்கள் குடும்ப நண்பரான திரு. ஜோசி அவர்களைத் தொடர்பு கொண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் புத்தகங்களை வாங்கி எனது உறவினர்கள் மற்றும் சாய் அன்பர்களுக்கும் கொடுத்து அவர்களையும் பாராயணம் செய்ய வலியுறுத்தினேன்.திரு. ஜோஷி அவர்கள் ஒரு மிகப் பெரிய சேவையாக தந்த குருமார்கள் புத்தகங்கள் பதிப்பு மற்றும் சர்க்குலேஷனை ஒரு ஈடு பாட்டுடன் செய்து வந்தார்.

நான் சென்னை வந்த பிறகு எங்கள் நட்பு மீண்டும் புதுபிக்கப் பட்டு இன்னும் நெருக்கமான ஒன்றாக மலர்ந்தது. வயதில் 20 வருடங்கள் மூத்தவரானாலும் என்னிடம் அன்புடன் பழகினார். அவர் மூலம் சத்சரித, புனிதப் புத்த கங்களை வினியோகம் செய்வதில் ஒரு மிகுந்த மகிழ்ச்சி, குரு தத்த பந்துக்களுடன் தொடர்பு ஏற்பட்டு நமக்கும் ஒரு சேவை செய்ய வாய்ப்பாக அமைந்தது.

பின்னாட்களில் அவருடன் சேர்ந்து ஒரு குழுவாக நாங்கள் கானகாபூர், அக்கல்கோட், குருவபூர், மந்த்ராலயம், பிடாபுரம் என புனிதப் பயணம் செல்ல வாய்ப்பும் கிடைத்தது. நான் ஏழுநாள் பாராயணம் முடித்தவுடன்,

பிடாபுரம் சென்று ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரை தரிசனம் செய்ய ஒரு தாகம் உருவானது. கலியுகத்தில் ஸ்ரீ குரு தத்தாத்ரேயரின் முதல் அவதாரமான ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அவதரித்த இடம் தான் ஆந்திராவில் காகினாடாவிற்கு அருகில் அமைந்துள்ள "பிடாபுரம்" என்ற புண்யஸ்தலம்.

சுமார் 800 வருடங்கள் முன்பு அவதரித்து பல "பால லீலைகள்" புரிந்து 16 வயது வரை தன் பெற்றோருடன் வாழ்ந்து, பின்பு 14 வருடங்களில் லோக சஞ்சாரம் சென்று முனிவர்களுக்கும், ரிஷிகளுக்கும் கிரியா யோக முறைகளில் புதிய உத்திகளை கற்பித்து, பக்தர்களுக்காக தர்பார் நடத்தி கிருஷ்ணா நதி தீரத்தில் இறங்கி ஒளி ரூபத்தில் மறைந்தவர் ஸ்ரீ பாதர்.

எனது மகன் அர்ஜுனையும் துணைக்கு அழைத்துக் கொண்டு பிடாபுரம் வந்து சேர்ந்தேன். பிப்ரவரி 2015 இல் என ஞாபகம். கங்கை நதிக்கு சமமாக வற்றாத ஜீவ நதியாக கரைபுரண்டோடும் மிகப் பெரிய புண்ணிய நதியான கோதாவரியின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பிடாபுரம் வந்தடைந்தோம்.

அங்குள்ள "பாத கயா" ஷேத்திரம் எனப்படும் குக்குடேஸ்வரர் கோவில் வளாகத்திலேயே தங்கும் அறை கிடைத்தது. அறையை விட்டு வெளியே வந்தால் 10 அடியில் கோவில் குளம் – பாத கயா என்ற ழைக்கப்படும் "தென் புலத்தார் கர்மங்கள்" செய்ய மிக உன்னதமான தெற்கேயுள்ள "கயா" வாகும். அதன் வளாகத்தில் அமைந்துள்ளது குக்குடேஸ்வரர் எனும் சிவஸ்தலம்.

வசிஷ்ட மஹரிஷி வழிபட்ட சிவலிங்கம் மற்றும் சக்தி பீடங்களில் ஒன்றான புரூஹூதி மாதா, தத்த பாதுகா ஆலயம்.

அந்த வளாகத்தில் தரிசனம் முடித்து, ஸ்ரீ பாதர் பிறந்த வீடான அவரது தாத்தாவின் வீட்டிற்குச் சென்று தரிசனம், இரவு நேர ஆரத்தி தரிசனம் முடித்து அறைக்குத் திரும்பினோம். அப்பொழுது ஒரு அற்புதமான அனுபவம் நிகழ்ந்தது.

அன்று திங்கள் கிழமை. அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை, விடியற் காலை ஐந்து மணியளவில் கோவில் குளத்தில் குளியல் முடித்து நம் கையால் சிவலிங்கம், கணபதி, தத்தர் பாதுகை எல்லா மூர்த்தங்களுக்கும் அபிஷேகம் செய்ய ஒரு வாய்ப்பு அங்கே வேலை செய்யும் ஒருவரால் எமக்கு அளிக்கப்பட்டது. மேலும் அம்பாளுடைய சக்தி பீடமான மஹா மேருவுக்கு நம் கையால் குங்கும அர்ச்சனை (லலிதா ஸஹஸ்ரநாமம்) செய்ய வாய்ப்பு, நம்மை மயிர்க்கூச்சரிய வைத்தது.

இவை முடிந்த பின்பே நமக்கு ஸ்ரீ பாத வல்லபர் சமஸ்தானம் செல்ல வாய்ப்பும் தரிசனமும் கிடைத்தது. இந்த அபார கருணையை என்னவென்று சொல்வது?

இத்தகைய நிகழ்வுகள் நமது நம்பிக்கையை பலப்படுத்தி, நமது பக்தியை ஊக்கப்படுத்தி மேன் மேலும் தொடர்ந்து பயணம் செய்ய வழிவகுத்தது எனலாம். இந்த நாட்களில் திருவருள் குருவருளாய் நம்மை வழிநடத்தி மேன்மேலும்

பாராயணங்கள் ஆன்மீக பயணங்கள் செய்ய ஊக்குவித்தது.

எனது அனுபவங்களை ஜோஷி அவர்களிடம் பகிர்ந்து கொண்டதன் பலனாக, அவர் என்னை அவரது 9 பேர் கொண்ட குழுவில் ஒருவராக, திரு. நெய்வேலி சந்தானம் அவர்கள் தலைமையில் கானகாபூர் (திரு. நரசிம்ம சரஸ்வதி பாதுகை கோவில்) அஷ்ட தீர்த்தம் எனப்படும் 8 புண்ணிய நதிகள் மற்றும் ஸ்ரீ சுவாமி சமர்த்தர் சமஸ்தானமான அக்கல்கோட், குரவபுரத்திற்கும் பயணம் செய்யும் வாய்ப்பை எனக்களித்தார்.

அத்துடன் மட்டுமின்றி 'பாத கயா' சென்றதன் பலன் உணமை யிலேயே, சிறிதும் திட்டமிடாத கங்கை குளியல், திரிவேணி சங்கமம், காசி, கயா எல்லா புண்ய ஸ்தலங் களுக்கும் செல்ல வாய்ப்பு கிட்டியது. தத்தாத்ரேயரின் பெற்றோர் அத்ரி மஹரிஷி அனுசுயா தேவி தவம் செய்த குகை, ஸ்ரீ ராமபிரான் தர்பார் நடத்திய சித்ர கூடம் என ராமாயணம் நிகழ்ந்த புண்ணிய இடங்களெல்லாம் சென்று தரிசனம் செய்ய வாய்ப்பு கிட்டியது. எனது முன்னோர்களுக்கான 'பித்ருகடன்' செய்து முடிக்கும் வாய்ப்பு கிடைத்து.

நாங்கள் 9 பேர் கொண்ட குழுவில் கிடைத்த அரும்பெரும் நட்பாக திரு. சந்தானம் அவர் களின் வழிகாட்டுதல் மற்றும் ஆன்மீக பயணத்தின் முக்கிய கட்டமாக திருமதி. மஞ்சரி ரமேஷ் அவர்களின் ஆத்மார்த்தமான ஆன்மீக நட்பு இன்றளவும் நமக்கு வரமாக விளங்குகிறது.

திரு. சந்தானம் அவர்கள் மூலமாக பின்னாட்களில் கிடைத்த இலங்கை செல்லும் வாய்ப்பும், மற்றும் அதன்மூலம் உருவான நட்பு வட்டாரம், குரு. ராம் ரத்தன் ஜி அவர்கள் சந்திப்பு, தொடர்பு... என பல அனுபவங்கள் மற்றும் மஞ்சரி சாய்ராம் அவர்களின் ஆலயம் நிர்மாணிக்கும் விருப்பம் மற்றும் அதை சார்ந்த நிகழ்வுகள் நமது ஆன்மீக சேவைக்கு ஓர் வடிவம் அமைத்துக் கொடுத்தது.

அந்த நாட்களில் நமக்கு கிடைத்த ஆன்மீக நட்பாய் ஸ்ரீ கஜானன் மஹராஜ் சரிதம் எழுதிய சகோதரி திருமதி. ரமா சுப்பிரமணியன் மற்றும் குருசரித்திரம் மற்றும் ஸ்ரீ மாணிக்கபிரபு திவ்ய சரித்திரம் ஆகியவற்றை தமிழ்மொழியில் அளித்த திரு. வெங்காஜிராவ் அவர்களின் புதல்வர் மதிப்பிற்குரிய திரு. ஸ்ரீ பாதராவ் அவர்களின் நட்பு என மலர்ந்து விரிந்தது.

நமது ஆன்மீகப் பயணத்தில் ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஒவ்வொரு புதிய நட்புகள் தொடர்புகள் ஏற்பட்டதுடன் அவற்றில் சில அதன் வேலை முடிந்தவுடன் விலகிச் சென்றதும் நம் கவனத்தில் வருகிறது. எனவே எல்லாம் நமது சத்குருவின் விருப்பப்படியே நிகழ்கிறது என்பது உறுதியாகிறது. அவ்வாறு உருவான சில தொடர்புகள் தொடர்ந்து நம் வாழ்வில் சில முன்னேற்றப் பாதைகளில் வழிநடத்துவதையும் இன்றளவில் நம்முடன் பல நாட்களாக தொடர்வதும் நமக்கு மகிழ்வான அனுபவமே.


ஒருமுறை இலங்கையிலி

ருந்து நம்மைத் தொடர்பு கொண்டு தமிழில் ஷீரடி சாய் ஆரத்தி புத்தகம் வேண்டும் என்று கேட்டார் சாய் பக்தரும் கொழும்புவில் அமைந்துள்ள சாயிநாதன் சரணாலயம் எனும் பாபா கோவில் நிர்வாக குழுவின் பிரதான உறுப்பினரான திருமதி. டாக்டர். மருதினி எனும் சகோதரி. மராத்தி சொற்களால் அமைக்கப்பட்ட ஷீரடி சாய் ஆரத்திப் பாடல்கள் கடினமாக இருக்கும் பொழுது தமிழர்களுக்கு இன்னும் சவாலாக இருக்குமென்பதில் வியப்பில்லை.

எனவே மறைந்த சாய் அன்பர் திரு. நாகசாமி எழுதிய தமிழ்மொழிபெயர்ப்பில் ஆரத்தி பாடல் ஒன்றை வாங்கி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதே சமயம் கொழும்புவில் கொட்டாஞ்சேனை எனுமிடத்தில் அமைந்திருக்கும் திரு. வரதராஜ விநாயகர் ஆலயத்தின் வளாகத்தில் ஷீரடி சாய்பாபா பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதை அறிந்தேன்.

அங்கு டாக்டர். ராம் ரத்தன் ஜி எனும் சாய்பாபாவின் சமகாலத்தில் வாழ்ந்த டாக்டர் பிள்ளை அவர்களின் மறுபிறப்பாய் விளங்கி, புகழ்பெற்ற ஆங்கில மருத்துவராக விஜயவாடாவில் வாழ்ந்தவரால் அகண்ட தீபம் ஏற்றி வைக்கப்பட்டு 49 நாட்கள் ஏழுமுறை சப்தமாக சாய் சரித்திரம் பாராயணம் நடைபெறுவதை அறிந்தேன். அவரை இலங்கை செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டு ஆசி பெற்றேன்.

மேலும் 100 தமிழ் ஆரத்தி



புத்தகங்கள் தேவைப்படவே, திரு. நாகசாமி அவர்களின் கிண்டி வீட்டிற்கு சென்று வாங்கி டாக்டர். மருதினி அவர்களை சென்னையிலுள்ள அவர்கள் பெற்றோரது இல்லத்தில் சந்தித்து கொடுத்தேன். பின்னாட்களில் எனது அன்பு சகோதரியாய் மலர்ந்தது எங்களின் நட்பு. நமது ஷீரடி சாய்நாதரின் கிருபையால் எங்கள் முதல் அறிமுக சந்திப்பிலேயே என்னை இலங்கை கோவில் விழாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

நானும் அதை பாபாவின் உத்தரவாக ஏற்றுக்கொண்டு இலங்கை சென்று வந்தேன். இதற்கு முன் ஒருமுறை எனது நண்பரின்

அழைப்பை ஏற்று அவரது வியாபார நிமித்தமாக சுமார் 10 ஆண்டுகள் முன்பு இலங்கை சென்றிருந்தேன். இம்முறை முழுவதுமாக பாபாவின் அழைப்பாக கொழும்பு சென்று, கோவில் வளாகத்திலேயே தங்கி பாராயணம், ஆரத்தி, ஹோமம் என கோலாகலமாய் அனுபவித்து ஒரு புதிய சாய் அன்பர்களின் வட்டாரத்தில் இணைந்தேன்.

இலங்கை கோவில் விழா முடிந்த வுடன், அடுத்த நாள் நாங்கள் அங்குள்ள சில கோவில்களையும் மற்றும் சில இடங்களையும் பார்க்க லாமென ஒரு ஆலோசனை வந்தது. ஆனால் எனக்கோ, பாபாவின் கோவிலைத் தவிர வேறு எங்கும் செல்ல விருப்பமே இல்லை. இதனால் என்னுடன் வந்திருந்த சாய் அன்பர் கோபித்துக் கொண்டு ஏன் உடன் வரமாட்டேன் என்கிறீர் களென வருத்தம் தெரிவித்து பின் அவர் மட்டும் ஒரு சக்தி பீடத்திற்கு சென்று வருவதற்கான ஏற்பாடுகள் நடந்தது.

அன்று மாலை ஓர் அற்புத செய்தி கிடைத்து அவரும் கொஞ்சம் குழம்பிப் போனார். ஏனென்றால் அவர் மட்டும் திட்டமிட்டபடி சென்றிருந்தால் ஓர் முக்கியமான வாய்ப்பை தவற விட்டிருப்பார். அப்படி ஓர் ஆச்சரியமூட்டும் சந்தோஷமான நாளாய் அமைந்தது இலங்கை வரலாற்றிலேயே! ஆம் அதைப்பற்றி நாம் அடுத்த இதழில் விரிவாக அறியலாம் நண்பர்களே!

குரு வாழ்க! குருவே துணை! ஓம் சாய்ராம்!

தொடரும்

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

14-வது சீரடி புனித பயணம்



சாய் சொந்தங்கள் அனைவரும் எனது பணிவான வணக்கங்கள். சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின் சார்பாக நமது குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் தலைமையில் 14 வது சீரடி புனித பயணத்திற்கு, கடந்த 16.06.25 திங்களன்று 24 நபர்களுடன் புறப்பட தயார் ஆனோம். அதன்பொருட்டு அனைவரையும் வரவேற்க நமது குரு முதல் ஆளாக சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் காத்திருந்தார். அனைவரும் சங்கமித்ததும் மதியம் 1.15 மணிக்கு மும்பை எக்ஸ்பிரஸில் புனிதப் பயணம் புறப்பட்டது.

மறுநாள் (17.06.25) காலை 6.30 மணிக்கு donut station சென்றடைந்தோம். எங்களை அழைத்து செல்ல ஹோட்டல் நிர்வாக மேலாளர் திரு. குப்தா அவர்களின் வாகனம் தயார் நிலையில் காத்திருந்தது. அங்கிருந்து புறப்பட்டு 12.00 மணிக்கு கோவையை பூர்வீகமாக கொண்ட ஸ்ரீ சிவநேசன் சுவாமிகளின் சன்னதிக்கு சென்றோம். அவர் பாபாவினால் ஈர்க்கப்பட்டு ஓம் சாய் ஸ்ரீ சாய் ஜெய் ஜெய் சாய் என்ற மகா மந்திரத்தை பக்தர்களுக்கு வழங்கியவர்.

அவரது சன்னதியில் நமது குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் பக்தர்களிடம் சத்சங்கம் நடத்தி 20 நிமிடம் தியானம் பயிற்சி அளித்தார். ஸ்ரீ சிவநேசன் சமாதியில் நிலவும் பேராற்றலை தன் ஆற்றலால் ஒவ்வொருவரின் உச்சந்தலை வழியாக உடல் முழுவதும் பரவ செய்து அனைவரையும் பரவச நிலைக்கு அழைத்து சென்றார்.

பக்தர்கள் அனைவரும் தங்களுக்குக் கிட்டிய அனுபவத்தை



சொ.அகஸ்டின்

பகிர்ந்து கொண்டனர். மேலும் இரண்டு பைரவர்கள் தியானத்தில் கலந்து கொண்டதையும் அனை வரும் கண்டு களித்தனர் . இந்நிகழ்வு முடிந்ததும் அங்கிருந்து புறப்பட்டு தங்கும் விடுதிக்கு சென்றோம். அங்கு தயாராக இருந்த மதிய உணவை முடித்து விட்டு சிறிது ஓய்விற்கு பிறகு சாய்நாதரை சந்திக்க உற்சாகமாக புறப்பட்டோம்.

எங்கு திரும்பினாலும் எங்கள் செவிகளில் கேட்பது "சாய்நாத் மகாராஜ்கு ஜெய்" என்ற குரல் தான். அவ்ஒலியை கேட்டுக் கொண்டே சாய் நாதர் அருகில் சென்றோம் கருணை கடல் போல் காட்சி அளித்தார் கலியுகத்தின் கண்கண்ட தெய்வம். அதன் நீலத்தையும் ஆழத்தையும் அளவிட முடியாது. மனதார தரிசித்து சமாதி மந்திரின் பின்புறம் பாபா அமர்ந்த வேப்பமரத்தடியில் உள்ள குருஸ்தானை வணங்கி பிரசாதம் பெற்று பிரகாரம் வந்தோம்.

சமாதி மந்திரில் அமைந் திருக்கும் பாபாவின் தொண்டர் களின் சமாதி, மற்றும் பார்க்க வேண்டிய இடங்களை நமது குரு அவர்கள் விளக்கி கூறி ஒவ்வொரு இடமாக அழைத்துச் சென்றார். முக்கியமாக சாயி மந்திர் வளாகத்தில் அமைந்துள்ள தீட்ஷித் வாடா மியூசியத்தில் பாபா உபயோகப்படுத்திய பொருட்களான புகைக்கும் குழாய் , பாபா அணிந்த கபினி , பல்லக்கு , சாய்வு நாற்காலி , குளிக்கும் கல், கோதுமை மாவு அறைத்த திருக்கை என எண்ணற்ற பொருட்களை சேகரித்து வைத்து





காட்சி படுத்தப்பட்டுள்ளதை அனைவரும் கண்டு மகிழ்ந்தனர்.

பின்னர் முதல் தளத்தில் அமைந்துள்ள தியான மையத்தில் அனைவரையும் 10 நிமிடம் தியானத்தில் அமர வைத்தார் குரு . அவ்வறையில் உயிரோட்டமாக பாபா சிலை நிறுவப்பட்டிருப்பதை கண்டு மகிழ்ந்தோம். பின்பு மகல்சாபதி இல்லம், பய்யாஜி இல்லம், மாதவ்ராவ் இல்லம், இலட்சுமிபாய் இல்லம், தரிசித்து விடுதிக்குவந்துஇரவுஉணவுமுடித்து ஓய்வெடுத்துக்கொண்டோம்.

மறுநாள் (18.06.25) காலை சிற்றுண்டி முடிந்ததும் ஆட்டோமூலம் கந்தோபா ஆலயம், பஞ்சமுக கணபதி, சகூரி உபாசினி மகாராஜ் மந்திர், குசால்சந்த் இல்லம், வீரபத்ர ஆலயம், கற்பக விருட்சம், இறுதியாக ஓல்ட் சீரடி ஆகியவற்றை தரிசித்து விடுதிக்கு வந்து மதிய உணவை முடித் துக்கொண்டு சிறிது ஓய்வெடுத்துக் கொண்டோம். பின்பு மாலையில் மீண்டும் சாய்நாதரை தரிசித்து தேவையான பிரசாதம் பொருட்களை வாங்கிக்கொண்டு இரவு தங்கும் அறைக்கு திரும்பி னோம்.

புண்ணிய பூமியில் புழங்குவதால் நாட்கள் நகர்வதே தெரியவில்லை அடுத்த பயணமாக 19 ஆம் தேதி வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கெல்லாம் சொகுசு வாகனம் காத்திருந்தது. பயணிகள் அனைவரும் புகழ்பெற்ற நகரமான நாசிக் சென்றோம். செல்லும் வழியில் பிரசிக்திபெற்ற சிவத்தலமான திரயம்பகேஸ்வரர் ஆலயத்தில் தரிசனம் செய்தோம்.

அதன்பின்நமது குருவின் ஆலோசனைபடி நாசிக்கில் மூன்று ஆட்டோக்கள் மூலமாக பஞ் சவடி முக்திதாம், லக்ஷ்மன் தபஸ் , சீதாதேவி குகை, காலாராம் ஆலயம், கோராராம், திரிவேணி சங்கமம் , லட்சுமி நாராயணன்



ஆலயம், அர்த்தநாரீஸ்வரர் ஆலயம், ஆகிய இடங்களை தரிசித்து விட்டு இரவு விடுதிக்கு திரும்பினோம்.

பகவான் சாய்நாதரை நினைந்து அவர் அனுமதியை பெற்று மறுநாள் (20.06.25) காலை புறப்பட தயாரானோம். அதற்கு முன் காலை 7.00 மணிக்கெல்லாம் வாழும் பாபா என அன்போடு அழைக்கும் அச்சுதானந்த சுவாமிகள் குருவின் அழைப்பை ஏற்று விடுதிக்கு வந்து அனைவரையும் சந்தித்து உதி பாக்கெட் மற்றும் பாபா புகைப்படம் கொடுத்து ஆசிவழங்கிப் புறப்பட்டார்.

அதன்பின் விடுதியில் காலை சிற்றுண்டி முடித்து மதியம் மற்றும் இரவு உணவுகளை பார்சல் செய்துக்கொண்டு காலை 9.00 மணிக்கு சீரடி இரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டோம். அன்று முழுவதும் குருவின் சத்சங்கத்தை கேட்டுக்கொண்டே பயணித்தது மறக்க முடியாது. இடையிடையில் சிறு சிறு எதார்த்த கதைகளை கூறியது இன்னும் சிறப்பாக இருந்தது. மறுநாள் 21.06.25 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் வந்தடைந்தோம்.

விடுதி ஊழியர்களுக்கும் உணவு மற்றும் வாகனம் ஏற்பாடு செய்த திரு. குப்தா அவர்களுக்கும் இக்குழுவுடன் பயணித்த திரு.கலியன் சாய் அவர்களுக்கும் திரு. கோபால் சாய் அவர்களுக்கும் மனதார நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்புனித பயணத்தை எந்தவித இடையூறுமின்றி மிகச்சிறப்பாக ஆனந்தமாக நடத்திக் கொண்டுத்த பகவான் சாய்நாதருக்கும் நம்முடைய குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்களுக்கும் சீரடி புனித குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றியினை காணிக்கையாக்கு கிறோம்.

●

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்-16

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா




ஒரு முறை சீரடியில் இராம நவமி அன்று ராமாகதா கீர்த்தனை செய்வதற்கு தாஸ்கணு மகராஜ் அவர்கள் மிகவும் கவர்ச்சிகரமான உடைகளை அணிந்து கொண்டு வந்தார். விலை உயர்ந்த தலைபாகையும், உள்ளே ஒரு சில்க் சட்டை அணிந்து மேலே கோட் போட்டிருந்தார். தோள்களில் அங்கவஸ்திரம், இடுப்புக்கீழே வழக்கமான தங்கசரிகைப்பட்டு கொண்ட வேஷ்டியை அணிந்து கொண்டு பாபாவின் முன்னால் சென்று வணங்கினார்.

அவரை மேலும் கீழும் பார்த்த பாபா, "நல்லாயிருக்கு மாப்பிள்ளை! இவ்வளவு அழகாக உடையணிந்து கொண்டு எங்கே சென்று கொண் டிருக்கின்றாய்? என்று கேட்டார். "கீர்த்தனை செய்வதற்கு பாபா" என்றார் தாஸ்கணு, அப்படியா? அப்படியானால் இந்த கவர்ச்சி கரமான உடைகள் எல்லாம் எதற்கு?

கீர்த்தனைகளின் கர்தாவாகிய நாரத ரிஷியே மேல் உடம்பிலும், தலையிலும் ஏதும் அணிவதில்லை. உனக்கென்ன வந்தது? இப்போதே கோட்டு, குல்லா, அங்கவஸ்திரம் எல்லாவற்றையும் கழட்டி என் முன்னால் வை என்றார்.

தாஸ்கணு மகராஜ் ஏதும் பேசாமல் உடனடியாக வேஷ்டியைத் தவிர அனைத்தையும் கழட்டி பாபாவின் முன்னால் வைத்தார். அதில் இருந்து கீர்த்தனை செய்யும் போது இவற்றை எல்லாம் அணிவதில்லை. கைகளில் சப்ளாக் கட்டை, கழுத்தில் ஒரு மாலை, அவ்வளவுதான்.

தாஸ்கணு ஒரு முறை தாணேவில் ஒரு கோவிலில் பாபாவின் புகழைப் பற்றி கீர்த்தனைகள் செய்து கொண்டிருந்தார். அதைக்கேட்டுக் கொண்டிருந்த, சிவில் கோர்டின் தற்காலிக ஊழியர் திரு. சோல்கர் என்பவர் பெரிதும் உருகிப் போனார். அவர் அங்கேயே, அப்போதே மனதினால் பாபாவிற்கு வணக்கம் செலுத்தி பின்வருமாறு விரதம் ஏற்றுக்கொண்டார்.



பாபா, நான் என் குடும்பத்தை காப்பாற்ற போராடும் ஓர் ஏழை. தங்களது அருளால் நான் தற்போது எழுதும் இலாகா தேர்வில் வெற்றி பெற்று நிரந்த உத்தியோகம் கிடைத்தால், சீரடிக்கு வந்து தங்களைப் பணிந்து பக்தர்க்ளுக்கு கற்கண்டு விநியோகிப்பேன். என்று வேண்டிக் கொண்டார். பாபாவின் ஆசீர்வாதத்துடன் சோல்கர் தேர்வில் வெற்றிபெற்று நிரந்தர உத்தியோகத்தைப் பெற்றார்.

ஆனால் திரு. சோல்கர் ஒரு பெரிய குடும்பத்தை தாங்க வேண்டி இருந்ததால், சீரடிக்கு செல்லும் பயணச் செலவினை தயார் செய்ய முடியாமல் தவித்தார். பிறகு சீரடிக்குச் செல்ல வசதியாக தனது செலவினை குறைக்க முடிவு செய்தார். அதன்படி தனது உணவிலும், தேநீரிலும் சர்க்கரை உபயோகிப்பதில்லை என முடிவு செய்தார். அது முதல் அவர் இனிப்புப் பண்டங்கள் எதையும் உண்பதில்லை.


எனவே இனிப்புக்குண்டான செலவினை சிறிது சிறிதாக சேமித்து சீரடிக்குச் சென்று மசூதியில் பாபாவை சந்தித்து வணங்கினார். பாபாவின் பாதங்களில் ஒரு தேங்காயை சமர்ப்பித்தார். தனது விரதப்படி அனைவருக்கும் கற்கண்டை விநியோகித்தார். பாபாவிடம் அவரது தரிசனத்தால் மிகவும் மகிழ்சி அடைந்ததாகவும், இன்று எனது ஆசைகள் நிறை

வடைந்தன என்றும் மகிழ்சியுடன் கூறினார்.

உடனே பாபா, அருகில் இருந்த அன்றைய விருந்து உபசரிப் பாளரான திரு. ஜோக் அவர்களை அருகில் அழைத்து, இவருக்கு நிறைய சர்க்கரை போட்டு ஒரு தேநீர் கொடு என்றார். பாபாவின் வார்த்தைகளைக் கேட்ட சோல்கர் மிகவும் மனம் உருகிப்போனார். சர்க்கரை பயன்படுத்த மாட்டேன் என்று தான் ஏற்றுக்கொண்ட ரகசிய விரதம் பற்றி பாபா எங்கனம் அறிந்தார் என்று வியந்து போனார். அவரது கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. அவர் மீண்டும் பாபாவின் பாதங்களில் வீழ்ந்து பணிந்தார்.

உடனே பாபா சோல்கரைப் பார்த்து "என் முன்னால் பக்தி யுடன், உங்களது கரங்களை நீட்டுவீர் களேயானால் உடனே இரவும் பகலும் உங்களுடனே நான் இருப் பேன். ஏழு கடலுக்கப்பால் நீங்கள் செய்வதையும் நான் அறிவேன். இந்த பரந்த உலகத்தில் நீங்கள் எங்கு வேண்டு மானாலும் செல்லுங்கள். நான் உங்களுடனேயே இருப்பேன். உங்களது இதயமே என்னுடைய இருப்பிடம். என்னை இவ்விதமாக அறிந்து கொள்பவர்கள் அதிர்ஷ்ட சாலியும், என்று கூறினார்.

ஒருநாள் காலையில் பாபா வுடன் அவரது பக்தரும் மசூதியில் அமர்ந்திருந்தனர். அப்போது மசூதியின் சுவற்றில் ஒரு பல்லி டிக்டிக் என் சப்தமிட்டது. உடனே பாபாவுடன் இருந்த பக்தர் பாபா,



பல்லியின் இந்த சப்தம் நல்ல சகுணமா? கெட்ட சகுணமா? என்று கேட்டார்.

உடனே பாபா, உனது செய்கை பல்லிக்கு நல்ல சகுணம், கெட்ட சகுணம் ஆகுமா? பல்லியின் செய்கை உன்னை எப்படி பாதிக்கும். முட்டாள்தனமாக சிந்திக்காதே! அந்தபல்லியின் சகோதரி இன்று அவுரங்காபாத்தில் இருந்து வந்து கொண்டிருக்கிறாள். அதனால் அந்த பல்லி மகிழ்ச்சியால் சப்த மிட்டுக் கொண்டிருக்கின்றது என்றார்.

கேள்வி கேட்டவர் சப்த நாடியும் ஒடுங்கி மௌனமாக பாபாவையே பார்த்துக் கொண்டிருந்தார். சற்றுநேரத்தில் அவுரங்காபாத்தில் இருந்து ஒரு வியாபாரி குதிரையை ஓட்டிக்கொண்டு மசூதிக்கு வந்தார். அவர் பாபாவைப் பார்த்து விட்டு சற்று குதிரைக்கு ஓய்வு கொடுக் கலாம் என்று மசூதியில் இறங்கி பாபாவை வணங்கினார். பிறகு குதிரைக்கு கொள்ளு வைக்கலாம்

என்று சாக்கு முட்டையைப் பிரித்தார். மூட்டைக்குள் இருந்து ஒரு பல்லி வெளியே தாவிக்குதித்து சுவற்றில் ஏறியது.

உடனே பாபா, அந்த பக்தரிடம் அந்தப் பல்லியை கவனிக்கும்படி கூறினார். அந்தப் பல்லி பெருமையான நடையுடன் சுவற்றில் இருந்த தன் சகோதரிப் பல்லியை நெருங்கியது. நீண்ட காலத்திற்குப் பின் இரண்டும் சந்தித்துக் கொண்டன். ஒன்றை றொன்று முத்தம் கொடுத்து கட்டிய ணைத்துக் கொண்டன. சுற்றி சுற்றி ஓடிவந்து அன்பால் நடனமாடின.

சீரடி எங்கேயிருக்கிறது? அவுரங்காபாத் எங்கேயிருக்கிறது? குதிரையில் வந்த மனிதர் எவ்விதம் அவுரங்காபாத்தில் இருந்து சீரடிக்கு வந்தார்? இரண்டு பல்லி சகோதரிகளும் சந்திக்கப்போவதை பாபா எங்கனம் முன்னமே உணர்ந் தார். இவை இரண்டும்தான் சகோதரிகள் என்பதை எப்படி உணர்ந்தார். இவை எல்லாம் உண்மையிலேயே மிகவும் ஆச்சர்யமானது அல்லவா? பாபாவின் எங்கும் நிறைந்த பேராற்றலை இச்சம்பவம் நமக்கு உணர்த்துகின்றதல்லவா?

ஒரு நாள் காலைப் பொழுதினில், மிக உயர்ந்த பணக்காரரைப் போல் தெரிந்த ஒரு நபர் பாபாவை சந்திப்பதற்காக குதிரை வண்டியில் வந்து மசூதியில் இறங்கினார். அப்போது பாபா லெண்டிக்குச் சென்றிருந்தார். அங்கு நானும், பாபாவின் தொண்டர்கள் சிலரும் அமர்ந்திருந்தோம். அவர் நேராக என்னிடம் வந்து, அய்யா, இங்கு பாபா என்று ஒருவர் இருக்கிறாராமே அவரை நான் சந்திக்க வேண்டும். அவர் இப்போது எங் கிருக்கிறார் என்று சற்றே பணக் காரத் தோரணையில் கேட்டார்.

பாபா தோட்டத்திற்குச் சென்றி ருக்கிறார். சற்று அமருங்கள் வந்து விடுவார் என்றேன் நான். பணக் காரர் மசூதியில் ஏறி அமர்ந்து மசூதியை சுற்றும் முற்றும் நோட்ட மிட்டார். அவரது முகத்தைப் பார்த்தால் அவருக்கு மசூதியின் சூழல் பிடிக்கவில்லை என்று தெரிந்தது. நான் அப்போது நேற்று பாபாவைப் பற்றி சேகரித்த குறிப்புகளை வரிசைப்படுத்தி எழுதிக்கொண்டிருந்தேன்.

அவர் என்னைப்பார்த்து,என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றார். நான் நேற்றைய தினம் பாபாவுடனான அனுபவங் களை எல்லாம் குறித்துக் கொண்டி ருக்கிறேன் என்று கூற, அப்படியா னால் என் கதையைக் கொஞ்சம் கேளுங்கள். நான் பாபாவிடம் தேடி வந்தது எனக்குக் கிடைக்குமா என்று கூறுங்களேன் என்றார்.

நான் சும்மா இருக்காமல், பாபா விடம் எல்லாமே கிடைக்கும். நீங்கள் அப்படி என்ன தேடிவந் தீர்கள் என்று கேட்டேன். அவர் உடனடியாக, "பிரம்ம ஞானத்தை" என்றார். எனக்கு தூக்கிவாரிப் போட் டது. என்ன பிரம்ம ஞானத்தையா? என்று அதிர்ந்து கேட்டேன்.

ஆமாம் அய்யா, என்னிடம் இல்லாதது ஏதும் இல்லை.

இறைவனின் புண்ணியத்தில் ஏராளமான பணம், நிலங்கள், வீடுகள், நூற்றுக்கணக்கான ஆடுகள், மாடுகள் கணக்கில்லாத வேலையாட்கள், இரண்டு மனைவிகள், குழந்தைகள், செல்வம் கொழிக்கின்ற வியாபாரங்கள் ஏராளம், ஏராளம். ஆனால் என்னிடம் இல்லாதது இறை வனைப்பற்றிய ஞானம் மட்டுமே! அதை இந்த ஊரில் வசிக்கும் பக்கிரி அனைவருக்கும் தருகிறார் என்று கேள்விப்பட்டேன். ஆகவே அவரிடம் நானும் பிரம்ம ஞானத்தை பெறலாம் என்று வந்தேன் என்றார்.


அந்தப் புரியா மனிதனைப் பார்த்ததும் எனக்கு கோபம் வருவதற்குப் பதில் பரிதாபம் தான் வந்தது. பாபாவின் கோபத்தில் இருந்து அவரை காப்பாற்ற லாம் என நினைத்து, அவரது கருத்தை சற்று மாற்றலாம் என்று அய்யா, பிரம்மத்தை அறிவது என்பது அவ்வளவு எளிதல்ல! அது பல பிறவிகளுக்குப் பின்பு அடையக் கூடியது. அதிலும் குறிப்பாக, மனைவி, மக்கள்,செல்வம் என்னும் நினைவுகளிலேயே எப்போதும் முழ்கிக்கிடக்கும் உங்களைப் போன்ற பேராசைக்காரர்களுக்கு மிகவும் கடினம் அய்யா என்றேன்.

அவர், நான் கூறியதை கொஞ்சம் கூட சட்டை செய்ய வில்லை. அது இருக்கட்டும் பாபா இப்போது வந்துவிடுவாரா என்று கேட்டார். நான் பாபாவிடம் சிக்கப்போகும் அவரது விதியை எண்ணி நொந்தவாறு வரும் நேரம்தான் என்றேன். நான் கூறிக்கொண்டிருக்கும்போதே பாபா மசூதிக்கு வந்துவிட்டார்.

மசூதிக்கு வந்த பாபா அவரது இடத்திற்குச் சென்று அமர்வதற்கு முன்பு பணக்காரர் அவரின் முன்னால் சென்று சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து எழுந்தார். பாபா அவரைப்பார்த்து என்ன வேண்டும் என்றார். உடனே பணக் காரர், பாபா, இங்கு வருவோர் அனைவருக்கும் எவ்வித தாமத மும் இன்றி பிரம்மத்தை காண்பிக் கின்றீர்கள் என்று கேள்விப்பட்டு வெகு தொலைவில் இருந்து வந்திருக்கிறேன். எனவே, வெகுவாக களைத்துப் போயிருக்கின்றேன். நீங்கள் எனக்காக பிரம்மத்தை காட்டினீர்கள் என்றால் எனது இந்த கடுமையான முயற்சி வெற்றி பெறும் என்று கூறினார்.

உடனே பாபா, ஓ... எனதருமை நண்பனே! கவலைப்படாதே! நான் உடனே உனக்கு பிரம்மத்தை காண்பிக்கிறேன். என்னை நம்பி வந்துவிட்டாய் அல்லவா? இனி உனக்கு நான் பிரம்மத்தை காட் டாமல் விடுவேனா? என்னிடம் எப்போதும் கடன் என்பதே கிடையாது. எல்லாமே ரொக்கம் தாம். இதோ! உடனே பிரம்மத்தை காட்டுகிறேன் என்றார்.

என்னிடம் பலர் வந்து செல்வம், ஆரோக்கியம்,புகழ், பதவி, மனைவி, குழந்தைகள் போன்ற உலகப் பொருட் களையே கேட்கின்றனர். ஒருவனும் என்னிடம் பிரம்ம



ஞானம் கேட்பதில்லை. இக்காலத்தில் ஆத்மார்த்த விஷயங்களில் ஆர்வமுடைய மனிதர்களை காண்பது மிகவும் அரிதாகி விட்டது. ஆகையால் உம்மைப் போன்ற மனிதர்கள் வந்து பிரம்மஞானம் கேட்கும் போது நான் மிகவும் ஆனந்தப்படுகிறேன். என்று கூறிய பாபா, பணக்காரரின் மனதினை திருப்ப வேறு விசயங்களைப்பற்றி பேச ஆரம்பித்தார்.

பிறகு சிறிது நேரம் கழித்து, ஒரு பையனைக் கூப்பிட்டு, அவனை நந்து மார்வாடியிடம் சென்று ஐந்து ரூபாய் கைமாதற்றாக வாங்கி வரும்படி அனுப்பினார். பையன் சென்று உடனே திரும்பி வந்து, நந்து மார்வாடி ஊரில் இல்லை என்று கூறினான்.

பின்னர் அவனை பாபா மளிகைக் கடைக்காரர் பாலா விடம் சென்று பாபா ஐந்து ரூபாய் வாங்கிவரச் சொன்னார். இம் முறையும் பையன் வெறுங்கையுடன் திரும்பினான். இந்த பரிசோதனை மூன்று முறை நடத்தப்பட்டது. மூன்று முறையும் பையன் இல்லை என்று திரும்பிவிட்டான்.

உண்மையில் சாயி அனைத்தையும் அறிந்த வாழும் பிரம்மமே யாகும். இந்த அற்ப தொகையான ஐந்து ரூபாய் சாயிக்கு ஏன் தேவைப்படுகின்றது? ஏன் அதை கைமாற்றாக பெற முயன்றார் என சிலருக்கு சந்தேகம் வரக்கூடும். உண்மையில் அத்தொகை அவருக்கு தேவையிருக்கவில்லை. நந்துவும், பாலாவும் ஊரில் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும்.

பிரம்மத்தினை அறிய வந்த பெருந்தகை புதிய கரன்சி நோட்டுக் கட்டு ஒன்றினை தன் பையினில் வைத்திருந்தார். அவர் உண்மையிலேயே பிரம்மஞானத்தின் மீது ஆர்வமுள்ளவராக இருந்திருந்தால் ஐந்து ரூபாய்க்காக பாபா பல நபர்களிடம் ஆள் அனுப்பி கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார்.

பாபா ஓர் உயர்ந்த நபர், அவர் தனது வாக்கை எப்போதும் காப்பாற்றுவார். அவர் கேட்கும் தொகையும் அற்பமானதே! எனினும் பாபா கேட்கும் தொகையை அவர் கொடுக்க முன் வரவில்லை. ஆனால் உலகிலேயே மிகப் பெரிய பொருளான பிரம்மஞானத்தை பாபாவிடம் இருந்து பெற விரும்புகின்றார். பாபாவிடம் அன்பு பூண்ட எவரும், இம்மாதிரியான சம்பவம் நடந்திருந்தால் சும்மா பார்த்துக் கொண்டிருக்காமல்


உடனடியாக ஐந்து ரூபாய்யை அளித்திருப்பார்கள்.

ஆனால் பணக்காரருடைய இயல்பே வேறு மாதிரி இருந்தது. அவர் பாபாவிற்கு பணமும் கொடுக்கவில்லை. அதே நேரம் அமைதியாகவும் அமர்ந் திருக்கவில்லை. அதற்குப்பதில் அவர் திரும்பிச் செல்வதற் குண் டான நேரம் ஆகிவிட்டது என்று பதட்டமாகி, பொறுமையை இழந்து பாபாவை நோக்கி, ஓ... பாபா, எனக்கு ஊருக்குச் செல்வதற்கு நேரமாகிவிட்டது. இருட்டுவதற்குள் நான் ஊருக்குச் செல்ல வேண்டும். தயவுசெய்து எனக்கு பிரம்மத்தை காட்டுங்கள் என்று பாபாவை அவசரப்படுத்தினார்.

பாபா அம்மனிதனைப் பார்த்து கூறினார், ஓ...எனதருமை நண்பனே! நீ பிரம்மத்தை காணும் பொருட்டு நான் இதுவரை உனக்கு காட்டிய நுணுக்கங்களை நீ காணவில்லையா? சரி, பரவா யில்லை. உனக்காக பிரம்மத்தை கண்டு உணர்வதற்கு சில விதிகளை சுருக்கமாக கூறுகிறேன் கேட்டுக் கொள். பிரம்மத்தைக் கண்டு உணர் வதற்கு ஒருவன் ஐந்து பொருட்களை கொடுக்க வேண்டும்.

அதாவது ஐம்புலன்களையும் அடக்கி ஆளவேண்டும். உடம்பே தேர், ஆத்மாவே எஜமானர், புத்தியே தேரோட்டி, மனதே கடிவாளம், உணர்வுகளே குதிரைகள். எவன் ஒருவன் புலன் உணர்வுகளின் மீது பற்று இல்லாது அதை அடக்கி ஆள்கின்றானோ அவனே தனது பயணத்தின் இலக்காகிய ஆத்மானு பூதியை அடைகின்றான். அங்கே அவன் மீண்டும் பிறப்பதில்லை.

இருப்பினும் குருவின் வழி காட்டலின்றி எவன் ஒருவனும் ஆத்மஞானத்தை தன்னுடைய சுய முயற்சியால் அடைய முடியாது. அது நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு அதி சூட்சும மாகவும், அறிவு நிலை கடந்த தாகவும் இருக்கிறது. ஆகவே ஆத்மானுபூதி அடைய ஏற்கனவே



ஆத்மானுபூதி அடைந்த குரு ஒருவரின் துணை அவசியமாகிறது. அவரின் துணையின் மூலமே ஆத்மஞானத்தை அடைய முடியும்.

ஆத்மாவானது, வேதங்களை கற்பதனாலோ,புத்தியினாலோ, மிகுதியான புலமையினாலோ, பூஜை, புனஸ்காரங்களாலோ பெறப்படுவது இல்லை. "ஆத்மா எவனைத் தேர்ந்தெடுக்கிறதோ அவனாலேயே அது பெறப்படு கிறது என்று கடோப உபநிஷதம் கூறுகிறது. இறுதியாக,

கடவுளின் அனுக்கிரகம் மிக, மிக முக்கியமானதாக கருத்தப்படுகிறது. என்று கூறி முடித்தார்.

பிறகு, நல்லது நண்பரே! உமது பையில் ஐந்து ரூபாயைப் போன்று ஐம்பது மடங்குள்ள (ரூ.250) உருவத்தில் பிரம்மம் (பணம்) உள்ளது. அவற்றை தயவுசெய்து வெளியேஎடு என்றார். அப்பெருந்தகையும், தனது பையில் இருந்து நோட்டுக்கட்டை எடுத்து எண்ணிப் பார்த்து அதில் பாபா கூறியதைப்போன்று ரூ.250 இருப்பதைக் கண்டு, பாபாவின் எங்கும் நிறைந்த பேரறிவைக்கண்டு, தன் தவறை உணர்ந்தவராய் பணத்தை பாபாவின் பாதத்தில் வைத்து வணங்கினார்.

பாபா கூறினார், உனது கட்டு பிரம்மத்தை நீயே வைத்துக்கொள்! உன் பேராசைகளை நீ முழுமை யாக விட்டொழித்தால் அன்றி மெய்யான பிரம்மத்தை ஒருபோதும் அடைய முடியாது. பேராசை யும், பிரம்மமும் எதிர் எதிர் துரு வங்கள். அவைகள் நிரந்தரமாக முரண்பட்டவை. எங்கே பேராசை நிலவுகிறதோ அங்கே பிரம்மத்தைப் பற்றிய எண்ணத்திற்கோ, தியானத் திற்கோ கொஞ்சமும் இடமில்லை.

நிலைமை இப்படியிருக்கு பேராசைக்காரன் எங்கனம் நிம்மதி யையும், பிரம்ம ஞானத்தையும் பெற முடியும். பேராசைக்காரனுக்கு, அமைதியில்லை, திருப்தியில்லை, உறுதியுமில்லை. சாதகனுக்கு எள்ளளவு பேராசை கூட ஆன்ம பயிற்சியை தடை செய்துவிடும். அகங்காரத்தோடு, எந்த நேரமும் புலன் இன்பத்தைப் பற்றிய சிந்தித்துக் கொண்டிருப்பவனுக்கு குருவின் போதனைகள் பயனற்றவை.

எனது கருவூலம் நிறைந்திருக் கிறது. அதுமட்டுமின்றி எப்போதும் அது திறந்திருக்கிறது. எவனுக்கும் அவன் விரும்புவதை நான் கொடுக்க முடியும். ஆனால் நான் கொடுப்பதை பெற்றுக்கொள்ளும் தகுதி அவனுக்கு இருக்கிறதா என்பதை நான் கவனிக்க வேண்டும். எனது பேச்சை கவனத்துடன் கேட்பீர்களேயானால் நீங்கள் உண்மையிலேயே நன்மை அடைவீர்கள் இம்மசூதியில் அமர்ந்து கொண்டு நான் உண்மை யைத் தவிர வேறொன்றையும் பேசுவதில்லை. என்றார்.

தமது இல்லத்திற்கு விருந்தினர் வந்தால் அவரின் பொருட்டு, இல்லத்தில் இருப்போருக்கும் சிறப்பு உணவுகளும் பரிசுப்பொருட்களும் கிடைக்குமல்லவா? அவ்வாறே மசூதில் அப்போது இருந்த அனை வரும் பாபாவினால் பணக்காரப் பெருந்தகைக்கு பரிமாறப்பட்ட ஆன்மீக விருந்து பரிமாறப்பட்டது. பணக்காரர் உட்பட அனைவரும் பாபாவின் ஆன்மீக விருந்தை உண்டு ஆசீர்வாதத்தைப் பெற்று மிகவும் திருப்தியுடன் அவ்விடத்தை விட்டு சென்றனர்.

தங்களது வீட்டை துறந்து காடுகளிலும், குகைகளிலும், மடங்களிலும், தனிமையில் இருந்து கொண்டு தங்களுக்கே

ஆத்மானுபூதி வேண்டி முயற்சி செய்து கொண்டிருக்கும் அநேக முனிவர்கள் இருக்கிறார் கள். மற்றவர்களைப் பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. எப் போதும் அவர்களது அந்தராத்மாவில் மூழ்கியே இருப்பார்கள்.



சாய்பாபா அவ்வகைச் சேர்ந்த வர் இல்லை. அவருக்கு வீடில்லை, மனைவி மக்கள் இல்லை, உற்றார் உறவினர்கள் யாருமே இல்லை. எனினும் அவர் மக்களோடு மக் களாக இவ்வுலகத்தில் வாழ்ந்தார்.

நாலைந்து வீடுகளில் இருந்து தமது உணவு பிச்சை எடுத்து உண்டார். எப்போதும் வேப்ப மரத்தடியிலேயே வாழ்ந்தார்.

நமது ஊனக்கண் களுக்குத் தெரியாத உலக விசயங்களை நடத்திக்கொண்டு, மக் களுக்கு இவ்வுலகத் தில் எப்படி வாழப் பழக வேண்டும் என்று போதித்தார். கடவுள் காட்சியைக் கண்டவுடன் மக்களின் நல்வாழ்விற்காக பாடுபடுகின்ற முனிவர்களையோ, சாதுக் களையோ காண்பது அரிது. அவர் இறைவனை அடைந்தபின்பும் சாமான்ய மக்களுக்காக இரங்கி அவர்களுடனே வாழ்ந்து வந்ததால் சாயிபாபா மகான்களில் எல்லாம் முதன்மையானவராக கருதப்படு கின்றார். ●

எதிர்காலம்



உங்களுக்கென்று எதிர்கால வாழ்க்கை இருக் கிறது. ஆன்மீகப் பாதையைத் தேர்ந்தெடுக்க உங்களுக்கு வயது முதிரும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. சீக்கிரமாகத் தொடங்குங்கள், மெதுவாக ஓட்டுங்கள், பாதுகாப்பாக வந்து சேருங்கள்.

இந்த வயதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். மிகவும் அற்பமான விஷயங்களைத் தேடி அலைந்து காலத்தை விரயம் செய்யாதீர்கள். காலம் என்பது மிகவும் மதிப்பு மிக்கது. அதை ஒருமுறை இழந்தோம் என்றால் மீண்டும் அதைப் பெற முடியாது. உங்களது புலன்கள் நல்ல நிலையில் இருக்கும்போதே எதை தெரிந்து கொள்ள வேண்டுமோ அதைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

இப்போதே செயல் படுத்தா விட்டால் உங்கள் வாழ்க்கையில் எப்போதுமே செய்ய முடியாது. ஓ மனிதா! உனது புற அழகையும், இளமையையும், புலன்களின் சக்தியையும் பற்றி வீண் பெருமை கொள்ளாதே. கூடிய சீக்கிரம் நீ முதுமையடைவாய். உன் தலைமுடி நரைத்துப் போகும். உனது கண் பார்வை மங்கும். கிழக்குரங்கு என உன்பேரக் குழந்தைகளும் கேலி செய்வார்கள். உனது தேகம் வெறும் பொம்மை மட்டுமே. மறைந்திருக்கும் ரகசியத்தைப் புரிந்து கொள்! விழித்துக்கொள்! இப்போதே, இப்பொழுதே இந்த நிமிடமே செயலாற்று!

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
தியான வகுப்புகள்:

யோகி ஸ்ரீராம் பாபாவின் நேரடி பயிற்சி

"மௌனத்தின் மூலம் தவம்"

10 வார வகுப்புகள்

9 வாரம் ஆன்லைன் வகுப்புகள். 10 வது வாரம்
"மௌனத்தின் மூலம் தவம்" ஒரு நாள் பயிற்சி நடைபெறும்
* பயிற்சியாளர்கள் கண்டிப்பாக நேரில் வந்து கலந்து கொள்ள வேண்டும் *

நேரம் – ஞாயிறு காலை 9–10.30 வரை.
(மாதத்தின் முதல் ஞாயிறு தவிர)
மௌன தினத்தன்று
குண்டலினி தீட்சை கொடுக்கப்படும்.
கட்டணம் – ₹ 3500/-

- பிராணாயாமம்,
- யோகாசனங்கள்,
- கிரியா விளக்கங்கள்,
- தியானம்,
- ஆத்மஞானம்,
- குண்டலினி யோகம்.



கலியுகத்தில் அனைத்தும் சுலபமாகக் கிடைக்கும் என்பது பெரியோர்கள் வாக்கு.

குருவும் பயிற்சியும் உங்கள் உள்ளங் கையில் கிடைக்கிறது. தூரமாக இருக்கிறேனே என்று ஏங்க வேண்டாம். உங்களுக்காக ஆன்லைன் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

நேரிலும் வந்து பயிற்சி எடுத்துக் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு;

திருமதி. மாதங்கி பாலாஜி,

போன்: 9942219947

குரு வாழ்க! குருவே துணை! ஞான ஒளி திக்கெட்டும் பரவட்டும்!

ஒரு யோகியின் வாழ்க்கை எப்படி இருக்கும்? வாழ்க்கை அனுபவங்கள் எப்படி ஆத்மஞானமாக ஆகும்? ஸ்ரீராம் எப்படி யோகி ஸ்ரீராம் பாபா ஆனார்? ஒரு ஞானி எப்படி சிந்திப்பார், செயல்படுவார்? அதுதான் 'குருவைத் தேடி'. ஞானத்தை தேடுபவர்கள் கண்டிப்பாக படிக்க வேண்டிய நூல்.

– திருமதி. மாதங்கி பாலாஜி,
அவதூத கீதை, ஸ்ரீ பாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம், சாயி சமர்த்தர் நூல் ஆசிரியர்.

அற்புதமான நினைத்து பார்க்க முடியாத நிகழ்வுகள். அனுபவங்கள். எளிமை சுருக்கம் செறிவான விளக்கம். மிகவும் அருமையான ஒரு பொக்கிஷம். மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. அனைவரும் படிக்க வேண்டிய நூல்.


திரு.சந்தானம், நெய்வேலி. ஸ்ரீபாத ஸ்ரீவல்லப சரிதம் ஆசிரியர்.

குருவைத்தேடி புத்தகம் படித்து முடித்தேன். என்ன ஒரு பாக்யம் உங்களுக்கு. ரொம்ப சந்தோஷம். உங்கள் புத்தகம் பலருக்கு ஆசீர்வாதம். அது மனித குலத்தின் நம்பிக்கை. என் கோப்பை காலியாக உள்ளது.தயவுசெய்து என்னை ஆசீர்வதியுங்கள்.

திருமதி. கீதா, மயிலாப்பூர்.


தங்கள் புத்தகத்தை மெதுவாகத்தான் படிக்கத் துவங்கினேன்.ஆனால் வைக்க மனமில்லாமல் ஒரே நாளில் முடித்து விட்டேன்.இதைப்படித்த நான் பாக்கியசாலி ஐயா.நெஞ்சைத் தொடும் வரிகள். என்ன ஒரு அனுபவம்.கண்கலங்கி அழுது விட்டேன். இந்த புத்தகத்தை இறுக பற்றிக் கொள்வேன்.

திருமதி. காமாட்சி, சேலம்.



யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்



வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

STAR
Personal & Caring
Health Insurance
The Health Insurance Specialist

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

5 வருடங்கள்
மட்டும்
முதலீடு செய்து
வாழ்நாள் முழுவதும்
உறுதியளிக்கப்பட்ட (Guaranteed)
வருமானம் பெறுங்கள்.
Jeevan Utsav
மேலும் விபரங்களும், முதலீடு செய்யவும் அழைக்கவும்.
G. Gnanamoorthi PH: 8754431069

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் பதினெட்டு சித்தர்களில் ஒருவரான அருள்மிகு ஸ்ரீ சிவ வாக்கியரின் சீவ பீடத்தை தரிசனம் செய்து அவரின் வரலாற்று குறிப்புகளை அறிந்து கொள்வோம்.



– அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

ஸ்ரீ சிவ வாக்கியர்

சிவ வாக்கியரின் தந்தையும், தாயும் வள்ளல் குணம் மிக்கவர்கள். அருந்ததிக்கு நிகரானவர் அவரது தாயார். சிலைகள் செய்து விற்று பிழைப்பு நடத்தி வந்தார்கள் என்று கூறுகிறார்கள்.



சங்கர குலத்தில் பிறந்த நமது சிவ வாக்கியர் பிறக்கும் போதே "சிவ சிவ" என்று சொல்லிக் கொண்டே பிறந்ததால் சிவ வாக்கியர் என அழைக்கப்பட்டார். இவர் பிறந்த ஊர் சென்னை பூந்தமல்லி அருகே உள்ள திருமழிசை ஆகும்.

இவர் கால தத்துவம், மகா தத்துவம் முதலானவற்றை தம் இளம் வயதிலேயே நன்கு உணர்ந்தவர். இவரது பாடல்களில் பல அர்த்தங்கள் உண்டு. அதிலும்,

"நட்டகல்லை தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே, சுற்றி வந்து மொன மொன என்று சொல்லும் மந்திரம் ஏதடா! நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில். சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ" என்று பாடியுள்ளார்.

இந்த பாடலை நன்கு படித்தால் அர்த்தம் புரியும். சிவ வாக்கியர் ஒரு போதும் கடவுள் இல்லை என்று கூறவில்லை. "பாடலில் நாதன் உள்ளிருக்கையில்" என்ற வரி இருக்கும். நட்டு வைத்த கல்லை தெய்வம் எனக் கருதி வழிபடுவதை

விட்டு விட்டு எல்லாம் வல்ல இறைவனான அந்த நாதன் உன்னுள்ளேயே இருக்கின்றான் என்பதை நீ உணர வேண்டும் என் பதே அவர் இப்பாடலில் கூறியுள்ள கருத்தாகும். இதனை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிவ வாக்கியர் ஐம்பது வயதுக்கு மேல் குறத்திப்பெண் ஒருவரை மணந்து கொண்டதாகக் கூறப் படுகிறது. சித்தர் சிவ வாக்கியரின் சிவ வாக்கியம் என்ற நூல் எழுதப்பட்ட இடம் திருப்பூரில் இருந்து காங்கேயம் செல்லும் வழியில் இருக்கும் சிவன்மலை என்பதாகும்.பிரம்ம சித்தர், வாலை சித்தர், உரும நாதர் ஆகியோர் இவருடைய சீடர்கள்.

சிவவாக்கியர் யாத்திரை மேற் கொள்ளும் போது காசியில் ஞானி ஒருவரை கண்டார் "சிவ வாக்கியா உனக்கு திருமண வாழ்விற்காண வேளை இது. இன்னும் ஏன் தேசாந்திரமாக செல்கிறாய். உங்கள் ஊருக்கு திரும்பிச் செல்" என்கிறார்.

"தங்களின் சித்தம் ஐயா" என்று சிவ வாக்கியர் கூற, அதற்கு அந்த ஞானி ஒரு பிடி மலையும், ஒரு பேய் சுரைக்காயும் கொடுத்து இதை எந்த கன்னிப்பெண் சமைத்து தருகிறாளோ அவளை நீ மணந்து கொள் என்று கூறி அனுப்பு கிறார்.

பல ஊர்கள் சுற்றி தமிழ்நாட்டின் தென்பகுதியில் ஒரு சிற்றூரை ஒட்டிய பகுதியில் ஒரு குறவர்களின் கூட்டத்தைக் கண்டார். அங்கு சென்று ஒரு குடிசையின் திண்ணை யில் களைப்பில் அமர்ந்தார்.



குடிசைக்குள் இருந்து கன்னிப்பெண் ஒருத்தி சிவ வாக்கியருக்கு குடிக்க தண்ணீர் கொடுத்தாள்.

அதற்கு நன்றி கூறிய சிவவாக் கியர் அவளிடம் அம்மா, நான் சிறிது மணலையும், பேய் சுரக்காயும் தருகிறேன் நீ சமைத்து கொடுப்பாயா என்று கேட்டார். கொடுங்கள் சாமி நான் நொடியில் சமைத்து தருகிறேன் என்று அந்த பெண் மணலையும் பேய் சுரைக்காயையும் சமைத்து கொடுத்தாள். மணல் சாதமாக மாறியது, சுரைக்காய் கூட்டாக மாறியது. பிறகு சிவ வாக்கியர் உணவை உண்டு பின்பு பெண்ணின் உறவினர்களிடம் பேசி அப்பெண்ணை திருமணம் செய்து கொண்டு அவர்களுடனே வாழ்ந்து வந்தார்.

சிவவாக்கிய சித்தர் ஞானப் பாடல்களையும், சமூக சீர்திருத் தப் பாடல்களையும் எழுதியவர். சிவ வாக்கியர் சித்தர் பல இடங் களில் சீவ சமாதி ஆகியதாகச்



செவிலழிச்செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் சிவவாக்கியர் சீனாவில் சீவ சமாதி அடைந்ததாக போகர் தமது போகர் 7000 த்தில் 4 வது காண்டம் 620 வது பாடலில் கூறுகிறார்.

நமது ஆன்மீகப் பூமியான சென்னை திருமழிசையில் சிவவாக்கியர் சித்தர் பீடத்தை ஸ்ரீ பால கருட நந்தி சித்தர் சாய்ராம் அவர்கள் திருமழிசையில் அமைத்து உள்ளார்கள். அமைதியான இயற்கை சூழல் நிறைந்த இடம். உலகிலேயே, இந்தியாவில் முதல் முறையாக 27 கிலோ எடை கொண்ட "சம்பாலா" எந்திரம் அமைக்கப் பட்ட முதல் மகாசக்தி பீடமாகும்.

இங்கு பௌர்ணமி, அமாவாசை, சிவராத்திரி, வியாழக்கிழமை அன்னதானத்தோடு பூஜைகள் நடைபெறுகிறது. சிவ வாக்கியர் சித்தர் பீடத்தைச் சுற்றி பல அற்புதங்கள் உள்ளன. அனைவரும் தரிசிக்க வேண்டிய இடம்.

சித்தர்களை வழிபடுவோம்!

சித்தர்களின் சீவ சமாதிகளை தரிசனம் செய்வோம்!

ஆலய முகவரி: அருள்மிகு ஸ்ரீ சிவ வாக்கியர் சீவ சமாதி ஆலயம். அருள்மிகு ஸ்ரீ மகாசக்தி வைத்திய முனீஸ்வரர் எந்திராலயம், திருமழிசை – (சுந்தரம் பள்ளி எதிரே), BP பெட்ரோல் பங்க் அருகில்.

ஆலய தொடர்புக்கு: *8056518287*

பேருந்து மார்க்கம்: சென்னை கோயம்பேடு – திருவள்ளூர்

இறங்கும் இடம் : திருமழிசை சுந்தரம் பள்ளி.

இரயில் மார்க்கம்: சென்னை கடற்கரை – திருவள்ளூர்

இறங்கும் இடம் : ஆவடி, இங்கிருந்து வாகன வசதி உள்ளது.

கோவில் நடை திறக்கும் நேரம்:
காலை – 8.30 – 12.00 மணி வரை.
மாலை – 5.00 – 8.00 மணி வரை. ●

குருபூஜை



காவிரிக்கரையில் ஓர் பரமஹம்சர், ஸ்ரீ இராமா சாது அவர்களின் 130 வது குருபூஜை விழா கடந்த 23.06.25 திங்கட்கிழமை அன்று கும்பகோணம் கீழக் கொட்டையூர் ஸ்ரீ சாதனா நிகேதனத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 6 மணிக்கு திருவருட்பா அகவல் பாராயணமும், அதைத்தொடர்ந்து சோதி வழிபாடும் நடத்தப்பட்டு அனைவருக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

10 மணிக்கு சற்குரு நாதர் ஸ்ரீ இராமா சாது அவர்களுக்கு அபிசேக ஆராதனை குருவந்தனம், செய்து ருத்ரம் சமர்ப்பிக்கப் பட்டது. 11 மணிக்கு திருவண்ணாமலை சுவாமிகள். திரு. மாத்ருசேவானந்த மகராஜ் அவர்களின் பஜனை நிகழ்ச்சியும் மதியம் 12 மணிக்கு, மகா தீபாராதனை, புஷ்பாஞ் சலியும் மதியம் 1.00 மணிக்கு அன்னதானமும் நடைபெற்றது.



மாலை 5.30 க்கு ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம மஹா அர்ச்சனையும், இரவு மங்கள ஆரத்தியும் வெகு சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டன. ஸ்ரீ இராமாசாதுவின் பக்தர்களும், சீடர்களும் பெருமளவு கலந்து கொண்டு சிறப்பித்தனர். சுவாமிகள் நமது குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின்

இராஜசேகர்



தீட்சா குரு என்பதும், குரு தமது சிறுவயதில் இருந்தே அவருடன் இருந்து அவருக்கு சேவை செய்திருக்கின்றார் என்பதும் நமக்கு எல்லையில்லாத பேரானந்தம்.

சுவாமிகள் தமது இளம் வயதிலேயே வடநாட்டில் இருந்து இங்கு வந்துவிட்டார். ஆரம்பத்தில் இருந்தே அருட் தந்தை ஸ்ரீ இராமதாஸ் அண்ணா அவர்களின் பராமரிப்பில் இருந்து வந்த சுவாமிகள் தமது கடுமையான தவப்பயிற்சிகளை மேற்கொண்ட இடமாதலால் அங்கு எப்போதும் தவ ஆற்றல் நிரம்பி வழிவதை உணர முடிகின்றது.

ஏதும் உபாயங்களின்றி கண்களை மூடி சற்று நேரம் அமர்ந்திருந்தாலே. சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் அமைதி தானாக வந்து நம்மை சூழ்ந்துவிடும். தமது சிறுவயதில் யோகி ஸ்ரீராம் பாபா சுவாமிகளிடம் அமர்ந்திருக்கும்போது சுவாமிகள் "ஆனந்தத்தை அசைவு மறைக்கின்றது. அசைவை நிறுத்து ஆனந்தம் வெளிப்படும்" என்ற கூறிய வாக்கியங்கள் இப்போது நினைத்தாலும் காதில் ஒலிக்கின்றது என்று பழைய நினைவுகளில் முழ்கினார்.

ஞானிகள், யோகிகளின் சித்த பீடங்கள் எல்லாம் நமக்கு தெய்வ சன்னதிகளைவிட கூடுதல் ஆன்மீக அதிர்வலைகளை அளிக்க வல்லவைகள். பக்தர்கள் இது போன்ற ஆன்மீக மையங்களுக்குச் சென்று தங்களது வாழ்வை மேம்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய முகவரி: ஸ்ரீ இராமார்ப்பணம் டிரஸ்ட், வள்ளலார் கல்வி அறநிலயங்கள், கீழக்கொட்டையூர், கும்பகோணம்.

எல்லா நோய்களுக்கும் ஒரே மருந்து

முடவாட்டுக்கால் கிழங்கு



மூட்டுவலி, முழங்கால் வலி முதல் புற்றுநோய், ஆண்மை கோளாறுகள் வரை மருந்தாகும் ஒரே கிழங்கு முடவாட்டுக் கிழங் காகும். வேர்கள் இல்லாத இந்த கிழங்குகள் பாறைகளில் விளையக் கூடியது. செம்பு, தங்கம், இரும்பு, கால்சியம், மற்றும் பாறைகளிலுள்ள சிலிக்காவை உறிஞ்சக்கூடியவை. சைவ ஆட்டுக்கால் அல்லது முடவன் ஆட்டுக்கால், அல்லது ஆட்டுக்கால் கிழங்கு என்ற பெயர்களும் இதற்கு உண்டு.

இந்த முடவாட்டுக்கிழங்கில், கால்சியம், வைட்டமின், பாஸ்பரஸ், புரதம், தாது உப்புக் கள் நிறைந்திருக்கின்றன. முடவாட்டுக் கால் கிழங்குகள் நம்முடைய உடலில் கிட்டதட்ட 4000 நோய்களை தீர்க்கும் என்று கூறுகின்றார்கள்.

மலைப்பகுதியில் பாறைகளின் இடுக்குகளில் சீசன் கிழங்காக இவை விளையக்கூடியவை. சீசன் இல்லாத நேரங்களில் இந்த கிழங்கின் மேல் பகுதி சுருங்கிவிடுவதுடன், அதிலுள்ள நீர்ச்சத்தும் போய் விடும். அதனால்தான் இதை பதப் படுத்துவதற்காக மணல்களில் புதைத்து வைப்பார்கள் இது வருடக் கணக்கில் கெடாமல் இருக்கும்.

சிறுநீரகம் சுருங்குதல், உள்ளுறுப்பு சுருங்குதல், புற்றுநோய் என பல்வேறு நோய்களுக்கு முடவாட்டுக்கால் கிழங்கு அருமருந்தாகும். இந்த கிழங்கின் மேல் பகுதியை சுத்தம் செய்து, சுடுநீரில் போட்டு குளித்து வந்தால், சரும அலர்ஜி, அரிப்பு, சொறி, சிரங்குகள் எதுவானாலும் விலகிவிடும்.

நரம்பு பிரச்சனைகளை தீர்த்து, ஆண்மை கோளாறுகளையும் நீக்கக்கூடியவை. இந்த கிழங்கை பயன்படுத்தி குழந்தைகளை குளிக்க வைத்தால் வாத நோய் விலகிவிடும் என்பார்கள். மூட்டு வலி பிரச்சனைகள், எலும்பு சம்பந்தமான பிரச்சினைகள், நரம்பு, தசைகளில் ஏற்படும் கோளாறுகள், போன்றவற்றிற்கு மிகச்சிறந்த நிவாரணியாக இந்த கிழங்கு விளங்குகிறது.

ஆர்தரைட்டிஸ் பாதிப்புகளையும் சரிசெய்யக்கூடியது இந்த முடவாட்டுக்கால் கிழங்கு. 500 வகைகளுக்கு மேல் முடக்குவாதம் உள்ளதாக சொல்கிறார்கள். ஆனால் எந்தவிதமான முடக்குவாத நோயாக இருந்தாலும், அதன் தீவிரத்தையும் இந்த ஒரே கிழங்கு குறைத்துவிடும்.

குறிப்பாக, 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்

இந்த கிழங்கின் சூப்பை சாப்பிட வேண்டும். வயதானவர்களுக்கு எலும்புகளின் பலத்தை அதிகரிக்க செய்யும் சக்தி இந்த கிழங்குகளுக்கு உண்டு. எலும்பு மூட்டுகளுக்கு இடையேயுள்ள மஜ்ஜையை நன்றாக உறுதியாக வளர்க்கவும் பயன்படுகின்றது.

காய்ச்சல், செரிமான கோளாறுகள், கழுத்து வலி, தோள்பட்டை வலி, முதுகு வலி போன்ற அனைத்துக்குமே, இந்த கிழங்கு மருந்தாகிறது.தற்போது பவுடர் வடிவில் இந்த கிழங்கு, மருந்து கடைகளில் கிடைக்கிறது.

முடவாட்டுக்கால் கிழங்கு மேல் புறத்தில் ஆட்டின் மயிர் கால்களை போல நிறைய நார்கள் இருக்கும்.அதை தோலுடன் சீவி எடுத்தால், உள்ளே இஞ்சி போன்று கிழங்கு இருக்கும். இந்த கிழங்கை சிறு சிறு துண்டாக நறுக்கி கொள்ள வேண்டும். பிறகு இஞ்சி, பூண்டு, சீரகம், மிளகு, சின்ன வெங்காயம், கறிவேப்பிலை, தக்காளி இவை அனைத்தையும் மிக்ஸியில் விழுதாக அரைத்து கொள்ள வேண்டும்.

ஒரு பாத்திரத்தில் எண்ணெய், பட்டை, கிராம்பு பொரித்து, அதில், அரைத்த விழுதையும், வெட்டி வைத்துள்ள கிழங்கையும், மஞ்சள், பெருங்காயம் உப்பு, சேர்த்து வதக்க வேண்டும். பிறகு தேவையான தண்ணீர் ஊற்றி கொதிக்க விட வேண்டும். இறுதியில் கொத்தமல்லி தழை சேர்த்து இறக்கினால் முடவாட்டுக்கால் சூப் ரெடி.

ஆனால், இந்த சூப்பை மாலை 3 மணி முதல் 4 மணிக்குள் தான் குடிக்க வேண்டும் என்றும் நாங்கள் மருத்துவமனைக்குச் செல்லாமல் இருப்பதற்கு, பக்கவிளைவுகள் இல்லாத இந்த கிழங்குகள் தான் காரணம் என்று மலைவாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.05.25

எல்லா மதங்களிலும் உண்மை உண்டு. ஆனால் உண்மை என்பது ஒரு மதத்தில் அடங்காது.

02.05.25

இறைவனை உலகியல் பொருட்களோடு சம்பந்தப்படுத்திபார்ப்பதை விட்டுவிட்டு, உலகியல் பொருட்கள் அனைத்தையுமே இறைவனாகப் பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதுவே உண்மையான பக்தி!

03 05.25

போதி மரத்தில் மட்டுமல்ல, வேறு எந்த மரத்தில் அமர்ந்திருந்தாலும் புத்தன் ஞானம் பெற்றிருப்பான். காரணம் மௌனம்.

04.05.25

எவரிடத்தில் நம்பிக்கையும், பொறுமையும் இறுக்கிறதோ அவரிடம் வேண்டுதல் என்பது இருக்காது.

05.05.25

உலகப்பொருட்களின் மீது பற்று வைப்பவர்களுக்கு ஞானியின் வார்த்தைகள் காதில் ஏறாது.

06.05.25

உலகில் பெயர், புகழ், செல்வாக்கு, குடும்பம், வியாபாரம் அனைத்தும் நிலையற்றவை. நாம் உயிருடன் இருக்கும்போதே இவை மறையலாம். மேலும் இவையாவும் நம்முடைய இறப்பிற்குப்பின் பேசப்படாது. ஆனால், ஒழுக்கம், நன்னடத்தை, கருணை, அன்பு, ஆன்மா பற்றிய ஞானம், இவை வாழ்க்கை முடிந்த பின்பும் நமக்கு உதவும்.

07.05.25

குருவைத்தவிர வேறொருவருக்கு இவ்வுடலுக்கு நற்கதியளிப்பது

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

எப்படி என்பது தெரியாது. குரு தமது கரத்தால் தொடுவதால் தான் ஜடம் போன்ற மனிதர்கள் மேலே உயர்த்தப்படுகின்றார்கள்.

08.05.25

எனது மனம், எண்ணங்கள், கற்பனைகள், அனைத்தும் இறைவனுக்கு சமர்ப்பணம் என்கிறீர்கள். ஆனால் சிறிது நேரத்திலேயே உங்கள் பிடியில் இருந்து உங்கள் மனம் தப்புகின்றது. எதற்கு நீங்கள் எஜமானன் இல்லையோ அதை எப்படி இறைவனுக்குத் தர முடியும்.

09.05.25

மகான்களின் வாழ்க்கை சரிதம் என்பது அறவழியில் வாழ்வதற்குண்டான பாதையே அன்றி தர்க்க சாத்திரமோ, நியாய சாத்திரமோ அல்ல.

10.05.25

குருவின் நாமமும், அண்மையும், அருளும் அவருடன் வசிக்கும் பாக்கியமும், குரு மந்திரமும் எவ்வளவோ சென்ம சென்மாந்திர முயற்சிகளுக்குப்பின் அடையக்கூடியவை.

11.05.25

பரமாத்மாவை நாம் காண வேண்டுமாயின் ஓரிடத்தைத் தவிர வேறு எங்கேயும் காண இயலாது. அது மனிதனின் ஆன்மா. மானுட ஆன்மாவின் உள்ளே உறைந்துபோன பரமாணு வெடித்தெழுந்தால் அதுவே பரமான்மா!

12.05.25

புற உலகு கூறா உண்மைகளைக் கூறும் அக உலக அழகு மௌனம். மௌனம் என்பதே தவம். மௌனம் என்பதே வரம். நம்மிடம் நாமே வாங்கிக்கொள்வது. இதை அனுபவித்தால் அமைதி நிச்சயம். இறைவனின் சன்னதி சத்தியம்.

13.05.25

நாம் எந்த நிலையில் இருக்கின்றோமோ, அந்த நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்பவரே சற்குரு. குருவின் முழுமையை சீடன் அறிய வேண்டியது இல்லை. ஆனால் சரியான நேரத்தில் சீடனுக்கு வேண்டியதை அளிப்பார் சற்குரு.

14.05.25

ஆன்மீக சாதனைகள் பெரும்பாலும் சடங்குகளில் தான் ஆரம்பித்தாக வேண்டும். ஆனால் பரிணாம வளர்ச்சியாக சடங்குகள் நம்மை விட்டுவிடும் நிலைக்கு நாம் உயர வேண்டுமேயன்றி நாமே சடங்குகளை விட்டுவிடக்கூடாது.

15.05.25

இக்காலத்து அறிவியல் நீங்கள் ஆசைப்பட்ட அனைத்தையும் கொடுக்கும். ஆனால் தியானம் ஆசை என்றால் என்னவென்று கற்றுக்கொடுக்கும்.

16.05.25

சீடன் தயாராக இருந்தால் இறந்து போன குரு கூட ஞானம் கொடுக்க முடியும். சீடன் தயாராக

இல்லை என்றால் உயிரோடு இருக்கும் குருவினால் கூட ஒன்றும் செய்ய இயலாது.

17.05.25

உலகத்தில் உள்ள எல்லா ஆசைகளும் இறுதியில் சலிப்பையே தரும். இறைவனைத் தேடும் ஆசை உட்பட. சலிப்பே தராத ஆசை உன்னைத் தேடுவதே!

18.05.25

ஆசைகள் நிறைவேறினாலும் 'நீ' நிறைவடையும் வரை அமைதி என்பதை உன்னால் உணர முடியாது.

19.05.25

இந்த பூமி இறைவனை அடைய ஒரு பாலம் மட்டுமே! இதை உண்மை என்று நம்பி இங்கேயே நிரந்தரமாக தங்கலாம் என்று கனவு காண்பவன் முட்டாள்.

20.05.25

உண்மையைத் தேட முடியாது. அது இருப்பு. அதனுடன் நாம் இணைந்து கொள்ளலாம். ஆனால் பொய்யை நாம்தான் உருவாக்க வேண்டும்.

21.05.25

ஏமாந்து போவதால் நீங்கள் எதையும் இழப்பதில்லை. ஏமாற்றினால் எல்லாவற்றையும் ஓர் நாள் இழக்க வேண்டியிருக்கும்.

22.05.25

அவதாரம் என்பது கடவுளின் ஒரு பகுதியே! ஆனால் ஞானியோ சாட்சாத் கடவுளே!

23.05.24

அழியாத ஆன்மா அழியும் உடலில் இருப்பது தான் யார் என்பதை அறிந்து உணர்வதற்கே! அதுவே ஆத்மஞானம். அறிந்து உணர்ந்த பின் அதற்கு அடிமையாகி விடாமல், அடக்கமாக இருப்பதே ஆத்மானுபவம்.

24.05.25

குருவிற்கு நீங்கள் செய்யும் சேவை என்பது குருவின் சொல்லுக்கு கீழ்படிதலே!

25.05.25

"நான் உடல்" என்ற எண்ணமே அசுரன் என்ற நரகாசூரன். அசுரத் தனமான உடல் பற்று நீங்கினால் தான் ஆன்மா பிரகாசிக்கும். எனவே "நான்யார்" என்ற "ஆத்ம ஞானத்தை" அடையுங்கள்.அதுவே "தீப ஒளி"த் தத்துவம்.

26.05.25

அனைத்தையும் நானே செய்கிறேன் என்ற எண்ணமே அகந்தையை உருவாக்கும். நாம் இறைவனின் கருவியே அன்றி இறைவன் அல்ல. எவ்வளவுக்கு எவ்வளவு பணிந்து நடக்கின்றோமோ, அந்தளவிற்கு நன்மையுண்டு.

27.05.25

அகங்காரம் என்ற இருள் அகலாதவரை மெய்ஞானப்பாதை கண்களுக்குப் புலப்படாது!

28.05.25

எவன் ஒருவன் ஆன்மாவை உணராதவனோ அவனது அறிவு ஒருதலைப்பட்சமாக இருக்கும். ஆன்மாவை உணர்ந்தவனுடைய அறிவு பரந்து விரிந்து இருக்கும்.

29.05.25

இந்த நிமிடத்தில் இருந்து கவலைப் படாதீர்கள், இந்த நிமிடத்தில் இருந்து கோபப் படாதீர்கள், இந்த நிமிடத்தில் இருந்து மூத்தோரை மதியுங்கள், இந்த நிமிடத்தில் இருந்து நேர்மையாக இருங்கள், இந்த நிமிடத்தில் இருந்து உங்களது நன்றியுணர்வை வெளிப்படுத்துங்கள்.

30.05.25

மற்றவர்களோடு போட்டியிடுவதையும், ஒப்பிட்டுப் பார்ப்பதையும் நிறுத்திக் கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் யார் என்பது புரியும்.

31.05.25

அடிபட்டால் தனக்கு மட்டும் தான் வலிக்கும் என்பதல்ல! அனைவருக்கும் வலிக்கும். தன்னைப் போலவே அடுத்தவனையும் நினைப்பதுவே மனிதாபிமானம் எனப்படும்!

●



ஆத்மஞானிகள்

சிலர் விஷயப் புலிகளாக இருப்பர்கள். எல்லா விஷயங்களையும் விரல் நுனியில் வைத்திருப்பது போல் காட்டிக் கொள்வர்! தனக்கு எல்லாம் தெரியும் என்பது போல் நடந்து கொள்வர்கள். இத்தகைய விஷயப் புலிகள் அடுத்தவரை "உனக்கு ஒன்றும் தெரியாது!" என்று உருட்டுவர்! இத்தகைய விஷயப் புலிகள் ஆன்ம ஞானத்திற்கு எதிரானவர்கள்!

அவர்களை விட்டு உடனடியாக விலகிவிட வேண்டும் என்றால், அதற்கு எளிய வாழ்க்கை வாழ வேண்டும்! முட்டாளாக வாழ்ந்து விட்டு, இறைவன் மனம் வைக்கவில்லையே என புலம்புவதால் எந்தப் பயனுமில்லை! ஞான வாழ்க்கை கோழைகளுக்கல்ல! அது ஆன்ம தைரியம் உள்ளவர்களுக்கு மட்டுமே! அது போல் சம்சார வாசனை அற்று இருப்பது சிங்க துணிச்சலுக்கு சமம்!

அவர்கள் முன் விஷயப்புலிகள் ஓடிவிடும் இல்லாவிடில் கெஞ்சிப் பணிகின்றன! அந்த நடுக்கத்திலேயே கை கால் உதறி ஆத்மஞானிகளின் முன் மனித இனமே மண்டி இடுகிறது! ஜோதி அருகில் நெருங்க நெருங்க சுயநலக் குப்பைகள் எரியும் தர்ப்பை போல் எரிந்து சாம்பலாகி விஷயப்புலிகள் காகிதப்புலிகளாக காற்றோடு காற்றாக பறந்து விடுவார்கள்.

வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞ்ஞானம்



நான் உடல் அல்ல "ஆன்மா" என்பதை உணர்ந்து அந்த ஆன்மசக்தியை அடைவதே ஆத்மஞானமாகும். இவ்வாறு நம்மிடமுள்ள ஆன்மசக்தியை உணராமலும், எப்படி வெளிக் கொணர்வது என்று தெரியாமலும், நாம் வாழும் இவ்வாழ்க்கையில் பல்வேறு அல்லல்களுக்கு உட்படு கின்றோம். இந்த ஆன்மசக்தியை உணர்வதற்கே குரு என்பவர் விளக்காக நம் வாழ்க்கையில் வருகின்றார். பிரபஞ்ச சக்தியாகிய இறைத்தன்மையே நமக்கு தேடலின் பொருட்டு குருவை அனுப்பி வைக்கிறது.

இறைத்தன்மை என்பது என்ன? – கோடான கோடி அண்ட, பேரண்ட ஜீவராசிகளின் உள்ளும், புறமும், மேலும் இயக்கும் உயிர் சக்தியாக விளங்கும் பேராற்றலே இறைத்தன்மை. இதனை வள்ளல் பெருமான் மிகஅழகாக பின்வரும் பாடலில் விளக்குகின்றார்.

குலவு பேரண்டப்பகுதியோர் அனந்த
கோடி கோடிகளும் ஆங்காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுதும்
நிகழ்ந்த பற்பல பொருள் திரளும்
விலகுறாது அகத்தும் புறத்தும் மேலிடத்தும்
மெய்யறி வானந்தம் விளங்க
அலகுறாது ஒழியாது அதுவதில் விளங்கும்
அருட் பெருஞ்சோதி என் அரசே

இந்த பேரண்ட பகுதிகளில் சுற்றிக்கொண்டிருக்கின்ற கோள்கள் பலகோடி, அந்த கோடிக்கணக்கான கோள்களை நம்மால் அளவிடமுடியாது. அந்த பலகோடி கோள்களிலும் உயிரினங்கள் வாழ்கின்றனவா என்றால், வாழ்கின்றன. அப்படி உயிர்கள் வாழவேண்டும் என்றால் பல்வேறு பொருள்திரள்கள் தேவைப்படுகின்றது,



நாராயணன்

அதாவது நாம் இந்த பூமியில் வாழுவதற்கு தேவையான பஞ்சபூதம் போன்று, அந்தந்த கோள்களில் இருக்கின்ற உயிர்கள் வாழ்வதற்கும் பல்வேறு பொருள்திரள்கள் தேவைப்படுகின்றன. உலகங்கள், உலகங்களில் உள்ள உயிர்த் தொகுதிகள், அந்த உயிர்த் தொகுதிகள் வாழத் தேவையான பொருள் திரள்கள் இந்த மூன்றிலும், பெரும் கருணையுடைய இறைத் தன்மையானது மூன்று திறமாக விளங்கி, மலம் மாயைகளை நீக்கி ஆன்மாக்களுக்கு உயர்வளிக் கின்றது.

மூன்று திரள்களாவது, 1. அகத்தும், 2. புறத்தும், 3. மேலிடத்தும் அந்த பெரும் கருணையுடைய இறைத்தன்மையானது ஓவ்வொரு உயிர்களுக்குள்ளும் அது உயர் வடையும் பொருட்டு தெளிந்த, விசாலமான அறிவு ஒளியாக அகத்துள்ளே சுடர்விட்டு ஒளிர்கின்றது. அதுவே ஞானஒளி. இதுவே முதல் திரளான அகத்துள்ளே நிற்கும் நிலை.

இதே இறைத் தன்மையானது, உயிர்கள் வாழத் தேவையான பொருட்தொகுதிகளாக இருந்து உய்ய அருள்செய்கின்றது. உதாரண மாக, பஞ் சபூத தொகுதிகளாக வெளிப்பட்டு அதன் மூலம் மெய்ஞான அனுபவத்தை உயிர்கள் பெறுவதற்காக இறைத் தன்மையானது உடனாக நின்று அல்லது புறத்திலே நின்று அருள்கின்றது இதுவே இரண்டாம் திரளான புறத்திலே நிற்கும் நிலை.

மூன்றாவது திரளாக, இறைத் தன்மையானது சக்திகளுக்கும் சக்தர்களுக்கும் ஆணை செலுத்தும் அரசனாக, மலம் – மாயைகளும் ஒருநாளும் பற்றமுடியாத பெரும் பொருளாக இருந்து அல்லது மேலிடத்து இருந்து பிரபஞ்ச சக்தியாக நமக்கு ஞானத்தை ஊட்டுகின்றது.

இப்படி, இறைத்தன்மையானது அகத்தும் – புறத்தும் – மேலிடத்தும் நின்று எதற்காக விளங்குகின்றது என்று சொன்னால், எல்லா உயிர்களும் சச்சிதானந்த இன் பத்தை அடையவேண்டும் என்பதற்காகவே. இதனை தான் நம் வள்ளல்பெருமான் “மெய்யறி வானந்தம் (மெய்+அறிவு+ஆனந்தம் = சச்சிதானந்தம்)” என்று பாடலில் உரைக்கின்றார். அதாவது, இறைத்தன்மை என்கின்ற ப்ரபஞ்ச சக்தியானது எல்லா உயிர்களும் மெய்யறிவானந்தம் அடையும் பொருட்டு நம் ஆன்மாவை விட்டு

விலகாது, அலகுறாது, ஒழியாது – அகத்தும், புறத்தும், மேலிடத்தும் நின்று நமக்கு பேரானந்தத்தை அள்ளி வழங்குகின்றது.

இப்படியாக, இறைத்தன்மை நம்முள்ளே இருந்து கொண்டு, ஞானஒளியை அளிப்பதற்கு தயாராக இருக்கும் நிலையில் மனிதர்களாகிய நாம் அதற்கு எப்படி தகுதியாக்கி கொள்வது? – அதுதான், ஆத்மஞானம். தன்னை உணர்தல். இந்த மெய்ஞ் ஞான பாதையே நம்மை பிறப்பு – இறப்பு என்ற சூழல்களில் இருந்து காக்கக்கூடியது, பேரின்ப பெருவாழ்வை அளிக்கக்கூடியது.

ஆன்மா என்றால் என்ன? – நம் உடல், மற்றும் உயிரை இணைத்து இயக்குகின்ற பேராற்றல். ஆனால், அது நம் உடலும் அல்ல உயிரும் அல்ல. ஏனென்றால், உடல் என்பது அழியக்கூடியது – உயிர் என்பது எந்நேரத்திலும் உடலைவிட்டு செல்லக் கூடியது. உயிர் இல்லாத உடல் பிணம் என்று அழைக்கப்படுகிறது.

உடல் என்ற ஒன்றை வைத்து தான் உயிர் என்பது உள்ளதா இல்லையா என்பதனை அறியமுடிகிறது. மனிதன், தாவரம், மிருகங்கள், ஒருயிர் ஆக எதுவானாலும் ஆதாரம் என்று ஒன்று வேண்டும் உயிரானது உட்புகுவதற்கு. அந்த ஆதாரம், மனிதனில் உடலாகவும், தாவரத்தில் மரம், செடி மற்றும் கொடியாகவும், மிருகங்களில் அதன் உடலாகவும் இருக்கின்றது.

இந்த உடலையும், உயிரையும் இணைத்து இயக்குகின்ற இறைப்பேராற்றல் ஆன்மா அல்லது ஆத்மா எனப்படுவது. இந்த ஆன்மா எங்கும் வியாபித்திருப்பது, என்றும் நிலையானது, அழிவில்லாதது. உடலிலிருந்தும், உயிரிலிருந்தும் முற்றிலும் வேறானது தனித்தன்மை வாய்ந்தது.

ஞானம் என்பது – முதலில் அணுக்கள் தோன்றி, அந்த அணு கூட்டுகள் இணைந்து அண்ட பேரண்டமாகி ப்ரபஞ்சமாகி – உலகாகி, உயிராகி, பலவுமாகி எத்தனையோ கோடி ஜீவராசிகளில் நானும் ஒருவன் என்கின்ற தெளிந்த அறிவு பெறுவதே ஆகும். முடிவு என்பதனை ஒருவன் தெரிந்து கொண்டால் மீண்டும் பிறவாநிலை அடையலாம். முடிவை பற்றிக் கொண்டு தொடக்கத்தை அறியலாம், சரியான தொடக்கத்தை பின்பற்றிப்போனால் முடிவையும் உணரலாம். இப்படியாக, தொடக்கத்தையும் முடிவையும் அறிந்து மரணத்தை வெல்வதே ஞானமாகும். இதையே, அகத்தியப் பெருமான் பின்வரும் பாடல் வரிகளில் மிகஅழகாக கூறுகின்றார்.

"மகத்தான ரஹஸ்யமடா ஞானமார்க்கம்
இணங்கியதோர் அந்தரங்க மான சூட்சம
ஏகாந்த சூட்சமென்ற கதையை கேளு
குணங்குவிய ஆதி அந்தக்
குறியை நன்றாய்"

இந்த பாடலில், அகத்திய மாமுனி, ஆரம்பத்தையும், முடிவையும் அறிந்து தெளிவதே ஞானம். தெளிந்து அறியும் அறிவே ஞானமாகும். அந்த சூட்சமமான ரஹஸ்யமே ஞானமார்க்கம். அந்தரங்கமான இந்த சூட்சமத்தை உணர்ந்து ஏகாந்த சூட்சமம் என்ற பேரின்பபெருவாழ்வை



அடைவது. என்று அழகாக அகத்தியர் ஞானமார்க்கத்தை அரிய இந்த சிறுவரிகளில் நமக்கு எடுத்துரைக்கின்றார்.

உடலின் உள்ளே நம் உயிர் சக்தியானது சுழன்று இயங்கும் பொழுது அந்தந்த உடலின் அணுக்கூறுகளுக்கேற்ப அல்லது உடல்நிலைக்கேற்ப சிறந்த ஆற்றலாக எழுவதே உணர்ச்சிகள். இந்த உணர்ச்சிகளை தவிர்த்து உயிரானது பெறும் தெளிந்த அறிவு தான் ஞானம் என்பதாம். இது எளியோர்க்கும் புரியும் வகையில் ஞானத்தை பற்றி கூறப்பட்ட அழகான விளக்கமாகும்.

இந்த உணர்ச்சிகளானது ஐம்புலன்களால் வெளிப்படுத்தப் படுகிறது. புலன்களின் கவர்ச்சியில் சிக்குகின்ற மயக்கநிலையே மாயை என்றழைக்கப்படுகிறது. இந்த மயக்கநிலையாகிய மாயையிலிருந்து மீண்டுவருவதே அறிவின் தெளிர்ச்சி, இப்படி தெளிர்ச்சி அடையும் நேரத்தில் தான் அறிவானது ஆன்மாவை உணர்கின்றது. அறிவானது ஆன்மாவில் லயிக்கும் தருணம் தான் ஞானமானது உதயமாகும் அற்புதநேரம்,

அப்பொழுது ஆற்றலானது மனிதனிடம் பெருகுகின்றது. இந்த அற்புதநேரம், தருணம் யாருக்கெல்லாம் வாய்க்கும் என்றால், அறம், தவம் என்கின்ற முயற்சியுடையவர்க்கே கிடைக்கும். தவப்பயிற்சியின் தத்துவங்களின் விளக்கங்களை நன்கு அறிந்தவர்களுக்கே இது சாத்தியம். அவர்கள் மட்டுமே மற்றவர்களுக்கு அதனை விளக்கிக் காட்டியும், தீட்சைமுறையிலும் ஞானமாக அளிக்கமுடியும். அவர்களே ஞானகுருமார்கள்.

ஞானமே கடவுள். இந்த அண்ட சரசாரங்களிலும் உள்ள ஒலியானது "அ" காரம், பிராணிகள் முதல் மனிதன் வரை அனைவராலும் உச்சரிக்கப்படும் முதல் ஒலி "அ" என்பதாகும். அதனால் தான் வள்ளுவர் பெருந்தகை "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு". என்று தன் குறட்பாவை ஆரம்பித்தார்.

பல்லாயிரக்கணக்கான ஜீவராசிகளில் மனிதஇனத்துக்கு மட்டுமே ஆறாம் அறிவு என்ற சிறப்பறிவு இறைவனால் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பறிவை பயன்படுத்தி தெளித்தவரே நிலைபெற்ற ஞானிகள் என்றழைக்கப்படுகின்றனர். இந்த ஆறாம் அறிவின் தெளிவை அடையாவிட்டால் ஒருவன் எவ்வளவுதான் கற்றுணர்ந்தும் எந்தவித பயனுமில்லை.

தொடரும்.

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

ஆதி சங்கரர் அருளியதாக பல துதிகள் உள்ளன. அவற்றுள் உண்மையில் அவர் எழுதியவை எவை என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் "ஸ்ரீ தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம்" ஆதி சங்கரர் அருளியது என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மை. ஏன் என்றால் அவரது சீடர் சுரேஸ்வராச்சாரியார் இந்த துதிக்கு விளக்கவுரை எழுதியிருக்கின்றார்.



ஆதி குருவான ஸ்ரீ தட்சிணாமூர்த்தியைத் துதிப்பது போல் அமைக்கப்பட்டுள்ள இந்த துதி உண்மையில் ஆன்ம சிந்தனையைப் பற்றி கூறுகின்றது. உடல், மனச்சேர்க்கையால் அமைந்த ஜடப்பொருள் அல்ல மனிதன். உணர்வுப்பொருளாகிய ஆனாமாவே அவன். ஒருவன் தனது உண்மை இயல்பாகிய ஆன்மாவைப் பற்றி சிந்திப்பதும், அதனை அனுபூதியில் உணர்வதும் மேலான வாழ்வைத் தரும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

மகான்களும் அதையே கூறுகின்றனர். இருள் உன்னைச் சூழ்கின்ற போதெல்லாம் உன் உண்மை இயல்பை வலியுறுத்து. பாதகமானவை எல்லாம் மறைந்தே தீர வேண்டும். என்கிறார் சுவாமி விவேகாநந்தர்.

அப்படி உண்மை இயல்பை வலியுறுத்துவதற்கான, ஆன்ம சிந்தனைக்கான, ஒரு சாதனமாக திகழ்கின்ற" ஸ்ரீ தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தை" குரு பூர்ணிமாவை முன்னிட்டு நமது சாய் மகராஜ் குருவைத் தேடி ஆன்மீக மாத இதழின் வாசகர்களுக்காக தமிழில் வெளியிடுகின்றோம். இதைப் பாடுவதும், சிந்திப்பதும், ஓர் ஆன்ம சிந்தனை, ஓர் ஆன்ம தியானம் என்பதை சங்கரரும் சுட்டிக்காட்டுகின்றார்.

ஆதி குருவை வழிபடுவதற்குண்டான நம்முடைய மண்ணின் கலாச்சாரம் இதுவே! நாம் அனைவரும் பழையதை மறக்காமல் இத்துதிகளை தொடர்ந்து ஒதி அதில் உள்ள ஆன்ம கருத்துக்களை மனதினில் பதித்து "தன்னை யறிந்தால் தனக்கொரு கேடில்லை" என்று வாழ்வாங்கு வாழவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

ஓம் உலகைப் படைப்பவராகிய பிரம்மாவையே படைத்து அவருக்கு ஞானத்தினை யார் வழங்கினாரோ, அந்த பரம் பொருளை, உயர் வாழ்வினில் நாட்டம் கொண்ட வனாகிய நான் சரணடைகிறேன். அவர் என் புத்தியை ஒளிரச் செய்து, அது ஆனாமாவை நாடுமாறு தூண்டுவாராக!

ஓம் புறத்திலும், அகத்திலும், உயர்நிலையிலும் அமைதி நிலவட்டும்.

கண்ணாடியில் தோன்றும் நகரத்தின் பிம்பம் போலவும் கனவுக் காட்சி போலவும் பிரபஞ்சம் உண்மையற்றது. அது உண்மையில் ஆன்மாவிலேயே இருக்கிறது, ஆனால் மாயை காரணமாகப் புறத்தில் இருப்பதுபோல் தெரிகிறது. ஆன்மா, பிரபஞ்சம் என்று இரண்டு கிடையாது, இருப்பது ஒன்றே, அதுவே 'நான்' – இந்த உண்மை அனுபூதி நிலையில் உணரப் படுகிறது. அந்த அனுபூதி நிலையை அளிப்பவரும், குரு வடிவானவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

விதைக்குள் மரம் உள்ளது, அந்த நிலையில் அதற்கென்று தனிப்பெயரோ உருவமோ இல்லை. அதுபோல் இந்த பிரபஞ்சமும் பரம் பொருளிடம், அவருடன் ஒன்று பட்ட நிலையில் இருக்கிறது. அவரது மாயை காரணமாக காலம், இடம் ஆகியவற்றின் வாயிலாகப் பல்வேறு உருவங்களாகத் தோன் றிக் காட்சியளிக்கிறது. செப்பிடு வித்தைக்காரனும், பெரிய யோகி களும் தங்கள் சங்கல்பத்தா லேயே பல்வேறு பொருட்களைத் தோற்றுவிக்கின்றனர். அப்படி பிரபஞ்சத்தைத் தோற்று விப்ப வரும், குரு வடிவானவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

இந்தப் பிரபஞ்சம் பரம்பொரு ளாகிய உண்மையை அடிப்படை யாகக் கொண்டது. அதே வேளை யில் உண்மையற்ற பலவாகத் தோற்றமளிப்பது. தன்னைத் தஞ் சமடைந்தவர்களுக்கு, 'அந்தப் பரம்பொருள் நீயே' என்ற வேத வாக்கியத்தால் யார் அனுபூதியை அளிக்கிறாரோ, யாரை அனுபூதி யில் உணர்வதால் மீண்டும் இந்த சம்சார சாகரத்தில் பிறக்க வேண் டாமோ அந்த குரு வடிவான ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்கு கிறேன்.

பல துளைகள் கொண்ட பானையினுள் வைக்கப்பட்ட தீபத்தின் ஒளி அந்த துளைகள் வழியாக வெளியில் பிரகாசிக்கிறது. அதுபோல் கண்கள் முதலான புலன்களின் வழியாக ஆன்மாவின் உணர்வொளி வெளியில் பிரகாசிக் கிறது. அவ்வாறு யாருடைய ஒளியால் இந்த உலகமே ஒளி பெற்றுப் பிரகாசிக்கிறதோ, யாருடைய உணர்வால் உலகினர், 'நான் அறிகிறேன்' என்ற உணர்வைப் பெறுகிறார்களோ அந்த குரு வடிவான ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

மாயா சக்தியின் ஆடலால் மனமயக்கதிற்கு உள்ளாகி சிலர் தங்களை உடம்பு, பிராணன், புலன்கள், அலைபாயும் மனம், ஒன்றுமற்ற வெளி என்றெல்லாம் எண்ணிக் கொள்கின்றனர். அதனால் அவர்கள் தங்களை ஆண், பெண், குழந்தை, குருடன், ஐடப்பொருள் என்றெல்லாம் கருதுகின்றனர். மாயை சக்தியால் இந்த மாபெரும் மன மயக்கத்தை அழிப்பவரும் குரு வடிவானவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

கிரகண வேளையில் ராகுவின்

காரணமாகச் சூரியனும் சந்திரனும் பார்வையிலிருந்து மறைகின்றனர். ஆனாலும் அவர்கள் இருக்கவே செய்கின்றனர். அதுபோல் மாயை மறைப்பதால் ஆழ்ந்த தூக்கத்தில் மனிதனின் புலன்கள் ஒடுங்குகின்றன. ஆனாலும் 'அவன்' இருக்கவே செய்கிறான். அதனால்தான் காலையில் விழிக்கும்போது 'நேற்று நான் நன்றாகத் தூங்கினேன்' என்ற எண்ணம் அவனிடம் இருக்கிறது. இதுபற்றிய உண்மை அறிவைத் தருபவரும் குரு வடிவானவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

இளமை, வாலிபம், முதுமை, விழிப்பு, கனவு, தூக்கம் போன்ற வெவ்வேறு நிலைகள் கடந்து செல்லும்போதும் 'நான்' என்ற உணர்வு மாறாமல் உள்ளே ஒளிர்கிறது. தம்மைப் போற்றி வழிபடுபவர்களுக்கு இந்த நிலையின் உண்மையை மங்கல முத்திரையாகிய சின்முத்திரை மூலம் உணர்த்தி, தமது உண்மை வடிவையும் காட்டி அருள்கின்ற குரு வடிவான ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

எஜமான் – ஏவலன், குரு – சீடன், தந்தை – மகன் போன்ற காரண காரிய உறவுகள் நிறைந்தது உலகம் என்று யாருடைய மாயா சக்தியின் காரணமாக மனமயக்கமுற்று, கனவிலும் நனவிலும் மனிதன் காண்கிறானோ, அந்த குரு வடிவான ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

பூமி, தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன், உயிர்கள் ஆகிய எட்டு அம்சங்கள் நிறைந்தது இந்த உலகம். அசைகின்ற பொருட்களும் அசையாதவையும் இதில் அடங்கும். இவை அத்தனையையும் உள்ளடக்கிய உருவம் படைத்தவர் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி. மிகப் பெரியவரும் எங்கும் நிறைந்த வருமான அவரைக் கடந்து எதுவும் இல்லை என்று மகான்கள் காண்கிறார்கள். அந்த குரு வடிவான ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

ஆன்மாவின் எங்கும் நிறைந்த தன்மை இந்தத் துதியில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. எனவே இந்த துதியை ஓதுவதாலும், கேட்பதாலும் இதன் உட்பொருளை ஆழ்ந்து சிந்திப்பதாலும் தியானிப்பதாலும் அந்த நிலையை அனுபூதியில் உணரலாம். அத்தகையவன் தன்னை எங்கும் நிறைந்த ஆன்மாவாகக் காண்கிறான், எட்டு அம்சங்களிலும் வெளிப்படுகின்ற ஆற்றல்களைப் பெறுகிறான், பிரபஞ்சத்தின் தலைவன் ஆகிறான், தடையற்ற ஐஸ்வரியமும் ஆனந்தமும் பெறுகிறான்.

ஆலமரத்தின் அடியில் பூமியில் அமர்ந்திருப்பவர், எல்லா முனிவர்களுக்கும் ஆன்ம ஞானத்தை அளிப்பவர், மூன்று உலகங்களுக்கும் குருவானவர், மேலான தலைவர், தெய்வ வடிவினர், பிறப்பு இறப்பு ஆகிய துன்பங்களைப் போக்குபவர் – அந்த ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் உட்பொருள் ஆனவர்,

எங்கும் நிறைந்தவர்...



பாபா சீரடியில் ஐந்து வீடுகளிலிருந்து தம் உணவை பிச்சை எடுத்தார். அதை கொண்டு வந்து மசூதியில் உண்பார்.

சீரடியில் அதிகமாகத் தங்கி வந்த திருமதி ஜி.எஸ். கபர்டே என்னும் பெண்மணி, பாபாவுக்குத் தினமும் மசூதியில் உணவை நைவேத்தியமாக அளித்து வந்தாள்.

இருந்தாலும் பாபாவைத் தன் விடுதிக்கு சாப்பிட வரும் படி தொடர்ந்து அழைத்து வந்தாள். ஒருநாள் பாபா, அவளது வீட் டிற்கு வருவதாக உறுதியளித்தார். அன்றைய தினம் அவள் பாபாவுக் காக விதவிதமான உணவுகளைத் தயாரித்து கொண்டிருக்கும் போது, அந்த வாசனையால் தூண்டப் பட்ட ஒரு நாய் அங்கு வந்தது.

பாபாவுக்காகத் தூய்மையாகத் தயாரிக்கும் பண்டங்களை தூய்மை கெடச்செய்து விடுமோ என்று திருமதி கபர்டே பயந்தாள். அதை விரட்டுவதற்குக் கைக்கு எளிதாக எதுவும் கிடைக்காமற் போகவே, அடுப்பிலிருந்து எரிந்து கொண்டிருக் கும் விறகு ஒன்றை எடுத்து நாயின் மேல் எறிய, அது ஓடிவிட்டது.

அன்றும் கூட பாபா வரவில்லை. எனவே அவள், நைவேத்தியத்தை மசூதிக்கு எடுத்துச் சென்றாள். அவளைப் பார்த்தவுடன், பாபா "நான் உன் வீட்டிற்க்கு வந்த போது, எரிந்து கொண்டிருக்கும் விறகுக் கட்டையை என் மேல் ஏன் எறிந்தாய் " என்றார். திருமதி கபர்டே அவர் கூறியதன் பொருளை உணர்ந்து, தனது அறியாமைக்காக மனம் வருந்தினாள்.

ஒன்றேயாகிய சுத்த ஞான வடிவினர், களங்கமற்றவர், அமைதி வடிவினர் – அந்த ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

எல்லா கலைகளின் இருப்பிட மானவர், உலகியல் நோயின் மருத் துவர், எல்லா உலகங்களுக்கும் குருவானவர் – அந்த ஸ்ரீ தட்சிணா மூர்த்தியை வணங்குகிறேன்.

பரம்பொருள் தத்து வத்தை மௌனத்தால் போதிப் பவர், முதியவர்களும் உண் மையை அடைவதில் ஈடுபாடு உடையவர்களும் முனிவர்களு மாகிய சீடர்களால் சூழப்பெற்றவர்,

ஆச்சாரியர்களுக்கெல்லாம் ஆச்சாரியர், சின்முத்திரை தாங்கிய வர், ஆனந்த வடிவினர், தன்னுள் ளேயே ஆனந்தத்தை அனுப வித்து அதில் மூழ்கி இருப்பவர், மலர்ந்த முகத்தினர் – அந்த ஸ்ரீ தட்சி ணாமூர்த்தியை வணங்குகிறேன்.

வாசகர் குரல்...


வியக்க வைத்த பயணம்!

உங்கள் புத்தகத்தை திறந்து அமுத மொழியைப் படித்ததும் வேறு எதையும் படிக்க மனம் வரமாட்டேன் என்கிறது. அந்தள விற்கு அமுத மொழி எனக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஒவ்வொரு மாதமும் எனக்காகவே சாயி கூறுவதுபோல் இருக்கின்றது மிக்க நன்றி அய்யா. உங்கள் பணி தொடரட்டும்! ஓம் சாய்ராம்

– திரு. கந்தையாப்பிள்ளை.
நீடாமங்கலம்.

ஆசிரியரும், எமது குருவுமான யோகி ஸ்ரீராம் பாபாவிற்கு என் ஆத்ம வணக்கம் அமுத மொழி என்றும் திகட்டாத அமிர்த்த மொழி! குருவின் சாய்சரிதத்தில் பகவான் சாய்நாதரின் தட்சிணை திருவிளையாடல் அருமையாக இருந்தது.குருவின் இலங்கைப் பயணக்கட்டுரை அருமை. மாம்பழம் சுவையாக இனித்தது. மனம் புத்தி அகங்காரம் சிந்தனை தன்னம்பிக்கை ஆகிய ஐந்தையும் தந்து பொறுமை, நம்பிக்கையுடன் எனது ஞான குரு யோகி ஸ்ரீராம் பாபாவை சரணடைகின்றேன். திரு.நாராயணன் அவர்களின் வாழ்வியல் நெறிகாட்டும் மெய் ஞானம் தொடர் நன்றாக இருக்கின்றது. வாழ்த்துக்கள். குரு வாழ்க! குருவே துணை!

– திருமதி. இந்துமதி,
அயனாவரம்.



புதிய தொடரான யோகி ஸ்ரீராம் பாபாவின் இனிய மொழிகள், திரு. நாராயணன் அவர்களின் வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம் இரண்டு தொடர்களும் மிகவும் அருமை. பாராட்டுக்கள்.

– திரு. மாணிக்கம் ஆசிரியர்,
மதுரை.

வணக்கம் இந்த மாத இதழில் பகவான் சாய்பாபா பற்றிய செய்திகள் அனைத்தும் மிக மிக

அருமை. அமுதமொழி படிக்கும் பொழுது என் மனநிலைக்கு ஏற்றவாறு இருந்தது. மற்றும் மௌனம் நிகழ்ச்சி மிகவும் அற்புத மாக இருந்தது. இந்த பயிற்சியில் கலந்து கொண்டதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.1.06.25 நான் இறந்து மீண்டும் புதிதாகப் பிறந்தது போல் உணர்ந்தேன். குருவிற்கு ஆத்ம நன்றிகள். குரு வாழ்க குருவே துணை.

– திருமதி. தனம் அகஸ்டின், குன்றத்தூர்.

ஆத்மஞான குரு கட்டுரை, மெய்ஞானம் கட்டுரைகள் மிகவும் சூப்பர். இனிய மொழிகள் சூப்பரோ சூப்பர். இனிய மொழிகள் கண்டிப்பாக தனிப்புத்தகமாக வெளியிடுங்கள் நிறையப் பேருக்கு பயன்படும்.

– திரு. கா. செல்வம், சோழபுரம்.

பெட்டிச்செய்திகள் கர்மா, ஆத்மஞானம் அருமை அமுத மொழி சூப்பரோ சூப்பர். சாய்சரிதம் மிகவும் நன்றாக சரள மாக செல்கின்றது. ஆசிரியரின் இலங்கைப் பயணம் வியக்க வைத்தது. சாயி வழியில் பய ணித்து சாயியை மட்டுமே நம்பிக்கையுடன் பொறுமையாக இறுக்கிப் பிடித்தவர்களுக்கு ஒருநாளும் தாழ்வில்லை. மாறாக உயர்வு.! உயர்வு! உயர்வு மட்டுமே என்பதற்கு எங்களது குருவும், ஆசிரியருமான யோகி ஸ்ரீராம் பாபா அவர்களே எடுத்துக்காட்டு! நன்றி ஓம் சாய்ராம்.

– திருமதி. கலைமதி, குடந்தை.

சற்குரு சாயிநாதனை நான் இதுவரை ஆத்மஞான குருவாகப் பார்க்கவில்லை. இம்மாதம் தங்களின் இதழில் வெளிவந்தி ருக்கும் ஆத்மஞான குரு கட்டு ரையை படித்த உடன் தான் எனக்குப் புரிந்தது. ஆம் பாபா ஆத்மஞான குருதான் அதில் சந்தேகம் இல்லை. நன்றி அய்யா!

– திரு. கார்த்திகேயன், திருத்தணி.

இம்மாத புத்தகம் எனக்கு வருவதற்கு சற்று காலதாமதமாகி விட்டது. புத்தகத்தை படிக்காமல் எனக்கு நேரமே ஓடவில்லை. புத்தகம் வந்து படித்தவுடன்தான் நிம்மதியாக இருக்கின்றது. ஓம் சாய்ராம்.

– திருமதி. திலகவதி, நாகைப்பட்டிணம்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 9941816692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர். ரூ.3000.

திரு. குணசேகரன். வலங்கைமான்ரூ.3000

திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், சாலிகிராமம். ரூ.2000.

திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ.1

திரு. ஸ்ரீ குமார் கும்பகோணம். ரூ.1200.

திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.

திரு.சுந்தரேசன், வள்ளலார் அறநிலையங்கள். கொட்டையூர். ரூ.1000.

திருமதி. உமா மகேஸ்வரி, அயனாவரம். ரூ.1000.

திரு. வெங்கடாசலம் டி.நகர். ரூ.1000.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி, AYK, ரூ.1000.

திருமதி.மகாலட்சுமி முருகன். மதுரை. ரூ.500.

திருமதி. எஸ். அருள்தேவி. ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி, ரூ. 500.

திருமதி. நித்யா, கூடுவாஞ்சேரி. ரூ.500.

திரு. பாபு லதா, வேப்பம்பட்டு, ரூ.500.

திரு. நீலவண்ணநாராயணன், ரூ.501.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திரு.கிருஷ்ணமூர்த்தி, கோவை. ரூ.300.

திரு. வீ.கே. ரத்தினக்குமார், வேளச்சேரி. ரூ.300.

திருமதி. உமாதேவி. அயனாவரம். ரூ.200.

திருமதி. இந்திரா வெங்கட்ராமன். பெங்களூர். ரூ.200.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.200.

திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.

திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.100.

திரு. பரந்தாமன், சென்னை ரூ. 500.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 320 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 850 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா – ரூ.1,400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு.3,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி, ரூ. 500.
திரு. கிருஷ்ணமூர்த்தி, கோவை. ரூ.200
திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரவள்ளூர். ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர் ரூ.100.
திரு. கோபால் சாய்,விருகம்பாக்கம். ரூ.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068